"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 1998

## தைப்பொங்கல் சிறப்பிதழ்



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00



Indian Musical Instruments
7 Days a week, 11.00am To 7.00pm
JAS Musicals Ltd
108A The Broadway, Southall Middx. UB1 1QF U.K. Tel: 0181 574 2686 Fax: 0181 571 7445
தரமான வாத்தியக் கருவிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நேரில் வாருங்கள்.
அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்.

# உள்ளே.....


**தைமகளே வருக .... 2**
துன்னையூர் தேவலோகேஸ்வரக்குருக்கள்

**புதிய வேதம் எழுதுவோம்...... 3**
ஆசிரியர் தலையங்கம்

**இருபதே பன்னிரண்டு... 4**
தஞ்சை வழக்கறிஞர் டி.என். இராமச்சந்திரன்

**இந்து சமயம்......... 9**
க. குணரத்தினம்
பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் வரலாறு

**திருவாசகம் ஓதுவோம்.... 12**
திருமதி க. கந்தசாமி

**ஆன்மீகக் கவிஞர்......14**
-சாலினி
பாரதியின் கொள்ளுப்பேரன் திரு ராஜ்குமார் அவரகளுடன் செவ்வி

**CHILDREN'S SECTION**
Thai Pongal.....17
Maha Sivarathiri...19
Sri Ramakrishnar...20
Moorthi Nayanar..22
A Greedy Fox.....23
சொர்க்கமும் நரகமும்.... 24
What is the nature of 24

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள........25**
சாலினி

**பெண்களும் வேதமும்...........27**
ஞானாசாரிய சுவாமிகள்

**கலசம் சஞ்சிகையூடு கருத்துப் பரிமாறல்.......29**
வாசகர் கடிதங்கள்

**மெய்ஞ்ஞான ஒளியைத்தேடி...........33**
சுவாமி யோகேஸ்வரானந்தா

**பட்டமளித்துக் கௌரவித்தோம்.....36**
**குறித்துவைக்கவேண்டிய தினம்..36**

**கட்டுரைப்போட்டி...........38**
சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் தங்கப் பதக்கம் பரிசு

**பிறமதங்கள் .........39**
கண்ணதாசன்

**இருபது ஆண்டுகளில்..........37**
**கலசம் சந்தாப்படிவம்........37**

**படித்தேன்-ரசித்தேன்-புனிதமானேன்........30**
இது உங்களின் பகுதி

**Advertisements**
Jazz Musicals- Inside cover
Dimple Motors.....11
Ayngaran Enterprise...11
Markandan & Co.....15
Kumarans......16
Gossip......26
Prasad's Sweet...31
Varshi's Super Store.....31
Satyan Jewellers....32
Edgware Physiotherapy...34
Dental Surgery........35
Vasan &Company.....35
GlenCarriers Ltd...40
Sathy Estates.....40
Welcome Centre....Inside cover
Raju Pattni &Son...Back Cover



**ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன்**
**துணை ஆசிரியர் : திரு க. ஜெகதீஸ்வரன்**
**நிர்வாகம்: திரு வ.இ. இராமநாதன்**
**துணை நிர்வாகம்: திரு சிவ. அசோகன்**

நிர்வாகக்குழு
திரு மாணிக்கம் சுரேஷ், திரு இ. முருகதாசன், திரு. ந. சிவராசன், திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு சி. அற்புதானந்தன், Dr.ந. நவநீதராசா, திரு இ. சிவானந்தராஜா, திரு சி. தர்மலிங்கம்
வெளியீடு : சைவ முன்னேற்றச் சங்கம்(பிரித்தானியா), 42, Stoneleigh Road, Clayhall, Ilford Essex, IG5 0JD, England Tel/Fax:0181 550 4233

இலங்கையில் தொடர்பு: Mr. V. Balasubramaniam, 131 Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka
ஜேர்மனியில் தொடர்பு: Mr. T. Lambotharan, Kolner Str 298, 51645 Gummerbach, Germany

# தைமகளே வருக வருகவே!

-துன்னையூர் தேவலோகேஸ்வரக் குருக்கள்

ஆதவன் இருள்நீக்கி ஒளிமிளிரும் நாள்
ஆதிதேவாதி தேவர்களின் பகல் நாள்
போதகனாய் பகலவன் அருள்ஒளி மிளிர்நாள்
பூமிவாழ் உழவர்களின் பொங்கற் றிருநாள்
பேதமில்லா சைவசமயத்தோர் யாவரும் என்றும்
பொங்கிக் கொண்டாடும் பொற்தைத்திருநாளில்
நாதமாய் மிளிரும் தைமகளாய் என்றும்
நானிலமும் நல்லருள் சுரக்க வருகவே

நிறைவோடு நீதிநெறி பெருக வேண்டும்
நிகரற்ற திருவருள் என்றும் திகழவேண்டும்
குறைவின்றி அனைவரும் வாழ வேண்டும்
குஞ்சரமாய் உழவர் பயிர் செழிக்கவேண்டும்
அறைகூவி அனைத்துலகும் அமைதி பேணவேண்டும்
அன்பான சுபீட்சம் ஈழத்தில் நிலவவேண்டும்
இறைவனே இத்தனையும் அருளவேண்டும் என்றும்
இன்பமாய் தைமகளே மகிழ்ந்து வருகவே

மைவிழி மகரத்தில் நிறை மங்களம்பெற
மாட்சியொடு செங்கதிரோன் நின்று நிலைபெற
கைஉரக்க கமம் செய்யும் எம்மவர்கள்
கரம் நிறைய நிதிபெருகி மகிழ்வுபெற
வையகம் வளம்பெற்று வளர்ந்து மகிழ்வுபெற
வானம் மும்மாரி பொழிந்து மகிழ்வுபெற
தைமகளே தாரணியில் அனைவரும் மகிழ
தடையின்றித் தங்கமாய் வருகவருகவே!

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

மணி 5 ஒலி 21

கலசம்
KALASAM
தை - மாசி - பங்குனி 1998

# புதிய வேதம் எழுதுவோம்!!

இறைவா!

உனக்காக நாம் பாடிய தேவாரங்கள்தான் எத்தனை! கையிலே வேலை வைத்திருக்கிறாய்! கழுத்திலே பாம்பைச் சூடியிருக்கிறாய்! சங்கு சக்கரம் கூட வைத்திருக்கிறாய்! எத்தனை அரக்கர்களை தேவர்களைக் காப்பதற்காக அழித்திருக்கிறாய். வேலாயுதத்தால் சூரனை அழித்தாய்! நெற்றிக் கண்ணைத் திறந்து குற்றம் குற்றமே என்றாய்! தேவர்களுக்கு மட்டும்தான் நீ காக்கும் கடவுளோ? எங்கள் துன்பத்தைத் தீர்க்க நீ வரவேண்டும்! எங்கள் துன்பத்தைத தீர்க்க நீ வரவேண்டுமென்று நாங்கள் நினைப்பது தவறென்று நீ நினைக்கிறாயா? யாமிருக்கப் பயமேனென்று கூறிய நீயா. பாராமுகமாக இருக்கிறாய்? இறைவா! நீயே தஞ்சமென்று வாழ்பவர்கள் நாங்கள்! எங்கள் ஊனும் உடலும் பேசும் மொழியும் நீயே என்று வாழ்பவர்கள் நாங்கள்.

உன் கண்ணில் குருதி வழிந்ததாகக் கதை படித்திருக்கிறேன் இறைவா! அப்போ உன்னை நினைத்து நான் அழுதேன்! ஆனால் இன்று என் கூடப்பிறந்தவர்கள் உடலெல்லாம் குருதி பாய்கிறதே! இது உன் கண்களுக்குத் தெரியவில்லையா? கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறாயா? அல்லது பாசாங்கு பண்ணுகிறாயா? மனது துடிக்குது மாயவா! மானிடம் மடிந்து மனித சதை விற்பனையாகும் காட்சிகளைக் கண்டும் காணாமல் இருக்கிறாயா? உன்னைக் குற்றம் சொல்லி என்ன!! படைத்தவன் நீ பறிக்கிறாய்! இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறபோது சத்தம்போட்டு அழவேண்டும்போல் இருக்கிறது. முடியவில்லையே இறைவா?

வா இறைவா வா! உன் மௌனம் எங்களுக்குத் துன்பம் மாயவா!

விதி இதுவென்று பாடம் புகட்டாதே இறைவா?

வேதம் இதுதான் என்று சாட்டுச் சொல்லாதே!

அப்படித்தான் உன் வேதம் - உன் சாத்திரம் - உன் தர்மம் கூறினால் இறைவா! அவற்றை நெருப்பிலே போட்டுவிட்டுப் பூமிக்கு வா புண்ணியனே!

எங்களைக் காப்பாற்று! சிறையில் கூட இறக்கிறோம்! இறையைத் தேடி அலைகிறோம்! மறையில் மறைந்து நில்லாமல் இறையே நீ வா!!

புதிய வேதத்தை எங்களுக்காக இயற்று!

அல்லது நாங்கள் புதிய வேதம் எழுத உன் எழுது கோலை எங்கள் கைகளில் தா!!!!

ஓம் நமசிவாய!

ஆசிரியர்

# இருபதே பன்னிரண்டு

தஞ்சை வழக்கறிஞர் டி. என். இராமச்சந்திரன்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

தொல்லை இரும்பிறவி சூழுந் தளைநீக்கி
அல்லல்அறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

**பல்கலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசந் தெரித்தல்** என்னும் சிவப்பிரகாசம். நாடிப் புலன்கள் உழுது, பண்படுத்தி, வித்திட்டு, விளைவு செய்து, க்ருஷிக்கு ஏற்பச் சப்த ஸ்பரிஸ ரூப ரஸ கந்த அறுவடையைச் செய்வது என்பது ஒவ்வொரு ஜீவனின் நித்திய விதியாகியிருக்கிறது. **ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு** என்று வள்ளுவர் ஆமோதிப்பும் இதற்குக் கரி பகர்கின்றது. உயிரானது உலகத்தில் எந்நாளும் உழல வேண்டியதுதான் என்று அதன் கபாலத்தில் அழியா எழுத்தாக அயன் எழுதி வைத்தான் என்று கூறல் முடியாது. குறைந்த பட்சம் மனிதன் தேவ நிலையை அடைய முயலல் வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. **வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலை வேட்டு வாழ்** என்றே செந்நாப்போதார் செப்பிப் போந்தார். **நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன** என்கின்ற முறையில் பத்தோடு பதினொன்றாய் இருப்பதில் என்ன பெருமை இருக்கிறது? முப்பத்து முக்கோடியில் ஒன்று கூடினால் என்ன? குறைந்தால் என்ன? என்று கூடக் கேட்கத் தோன்றுகின்றது.

ஆகவே, விண் வாழ்விலும் பல்லோர் போற்ற வாழுதல்வேண்டும்என்ற எண்ணம் தடிக்கத் தலைப்பட்டதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இதன் விளைவே, பல்லோரும் பணிந்து ஏத்தச் சிவனடிக்கீழ் வதிதல் வேண்டும் என்ற நல்லெண்ண விகசிப்பாகும். ஆயினும், சாலோக சாமிப்பிய பதமுத்திகள் பரமுத்தி ஆகாவே. மலம் முற்றும் அற, பேரின்பத்தில் முக்குளிக்கவேண்டும் என்ற எண்ணம் முற்றி முதிர்ந்து முறுகி முடிந்த முடிவாயிற்று. சித்த மலம் அறச் சிவமாம்: இதுவே பேரின்பம். மேலும் ஒரு சொல்: பேரின்பம் வேறு: இன்பம் வேறு. இன்பம் என்பது ஒரு கோடியாய்ப் பல்கும். **எத்தனை கோடி இன்பம் வைத்தாய்** என்பது எங்கள் ஐயன் பாரதியின் மதம்.

பேரின்பம் என்பது ஒன்றே. இது வேறின்மை கை கண்ட நிலை. ஈறு நிற்கும் ஒன்றில் ஒன்ற, உயிரைப் பேரின்பம் ஸ்நாநிக்கும்.

**காட்சி அடங்கிக் கருத்து அடங்கிச்**
**செவி காணும் கவிதையும் தான் மடங்கி**
**ஆட்சிக்கு அடங்கிய ஆகத்து உணர்வுகள்**
**அத்தனைக்கும் மேல் ஓர் ஆனந்தமே**

என்பது திருலோக தரிசனம்.

ஆகவே, ஆனந்தம் என்பது பேரின்பம்: ஏனைய வெற்றின்பம். இந்த ஆனந்தம் என்பது பூவுலகில் இல்லைபோலும் என்ற எண்ணம் மேல் எழுந்தவாரியாகத் தோன்றும். இங்கு உயிர் பெறும் அதிக பட்ச மகிழ்ச்சி, சந்தோஷம் என்ற அந்தஸ்தைத் தாண்டி அப்பால் செல்வதில்லை போலும்.

சந்தோஷம் மனசுக்கு அதீனம்: ஆனந்தம் மனசுக்கு அதீதம். இஃது எங்கள் ஆசிரியர் வேங்கடத்துக் கந்தனார் தந்த வெளிச்சம். இந்த ஆனந்தத்தை எங்குப் பெறலாம்? இது வினா. ஆனந்தத் தேனிருக்கும் பொந்து இணையிலா இடைமாமருது. இது விடை. இவ்வானந்தத்தோடு வேறின்மை கைகாண்டற்கு உரிய மார்க்கம் சைவ சித்தாந்தம். இச் சைவ சித்தாந்தமே திருவெம்பாவையின் சித்தாந்தம். தோத்திரம் என்ற முறையில் திருவெம்பாவையில் இருபது பாடல்கள் உள. சாத்திரம் என்ற முறையில் சிவஞான போதத்தில் 12 சூத்திரங்கள் உள. என்றாலும் இவ் **இருபதே பன்னிரண்டு** இதை விளக்கவே இங்கு வந்துள்ளேன். சிவஞான போதம் பற்றி வித்துவான் கா.மு. சுந்தரமுதலியார் கூறியிருப்பது பின்வருமாறு.

இச் சிவஞானபோதம், சிவபெருமான் திருக்கரத் துட்கொண்டது. நந்திதேவருக்கும் சனகாதிகளுக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் உபதேசிக்கப் பெற்றது. சிறந்த சைவ சித்தாந்த ஞான முழுமுதல் நூலாய் விளங்குவது. விரிந்த பொருளை உடையது. வேறு எந்நூல்களிலும் இல்லாத மேலான விடயங்களைத் தன்னகத்துள் கொண்டது. பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. நாற்பது அடிகளை உடையது. இருநூற்றுப் பதினாறு சொற்கள் உடையது. அச் சொற்களுள் அறுநூற்று இருபத்து நான்கு எழுத்துக்கள் பெற்றது. ஒவ்வொரு வீட்டிலும் பூசித்துப் போற்றப்படுவது. ஒவ்வொருவரும் படித்துச் சிந்தித்துத் தெளிந்து முடிவான அத்துவித முத்தியைப் பெறுதற்கு உரியது.

சிவஞான சுவாமிகளால் சிற்றுரையும் பேருரையும் ஆகிய மாபாடியமும் அருளப் பெற்றது. எவராலும் மறுக்கப்படாதது எச்சமய நூல்களுக்கும் அரசாய் விளங்குவது.

திருவெம்பாவை பற்றி Dr.G.U.Pope அவர்கள் The mystic Song of the Maidens forms a pendant to the Morning hymn எனத் தொடங்கி and only the student of the South Indian Saiva philosophy can expect to enter into its spirit என்று முடிக்கின்றார்.

சிவாந்தரங்கமான திருவெம்பாவையானது திருப் பள்ளியெழுச்சிக்கு அமைந்ததோர் நற்பதக்கம். சைவசித்தாந்த மாணாக்கனுக்கே இதன் உள் ஆர்தல் ஒல்லும்.

திருவெம்பாவை உள்ளிட்ட திருவாசகத்தின் பொருள் யாது? இவ்வாறு தில்லை மூவாயிரவர் தென்னவன் பிரமராயரை வினவ அவர் சிற்சபை போந்து அங்கு நின்று உமை காண நம் பொருட்டுப்

**பசும்பொன் மன்றத் தொருதாள் ஊன்றி**
**வண்டு பாடச் சுடர் மகுட மாடப் பிறைத்**
**துண்ட மாடப் புலித் தோலு மாடப் பகி**
**ரண்ட மாடக் குலைந் தகிலமாட கருங்**
**கொண்ட லொடுங் குழற்கோதையோடுங் கறைக்**
**கண்டன் ஆடும் ஆடலைக் காட்டி**

எம் வாசகத்திற்கு இக்கனகமார் கவின் செய் மன்றில் அநக நாடகரே பொருள் என்று கூறி வான் கலந்தார். எட்ட எட்டச் சென்றாலும் எட்டாதிருக்கும் வான் நாடர் காணாத மன்னனுடன் மன்னுவதெங்ஙனே என்பதை வகுத்து வாசகமாக்கி வைக்கப்பட்ட எட்டாந்திருமுறை நமக்கு எட்டுந்திருமுறையாகத் திருவருள் துணைகொண்டு மணிவாசகத்தில் ஆழங்கால் படுதல் வேண்டும். இதைத் திருவருள் கூட்டி வைக்குமேல் ஊன் கலந்த உயிர் சிவத்தில் கலக்கும்.

செம்மை நலம் அறியாத சித்தரொடும் திரிதரு நிலைமை விலக்கி மும்மை மலம் அறுவித்து முத்தியில் கூட்டும் நெறியே சைவ சித்தாந்தநெறி. குருவருளால்தான் சீவனுக்கு உய்வு என்பது சைவ சித்தாந்தம் செப்பும் செந்நெறி.
குருவை அடைந்த சீடன் மாற்றுயர்வான். அவகரணங்கள் நீங்கச் சிவகரணங்கள் பெறுவான். இதை விளக்க வந்த குமரகுருபரர் சமத்காரமாய்ச் சொல்லும் செய்தி ஒன்று கேளீர். "என் குருவை அடைந்தேன். அவர் திருவடி என் தலைக்கு மணி ஆயிற்று. என்ன ஆச்சரியம்! என் பேர் குறுகியது. குறுக்கம் ஒரு மாத்திரை அளவினதாகும். முன்பு சீவனாய் இருந்த நான் இப்போது சிவனாகிப் போனேன்!"

**எற்கமலம் செய்யும் எழில் மாசிலாமணிதன்**
**பொற்கமலம் சென்னி பொலிவித்தேன் – நற்கமலை**
**ஊரில் குறுகினேன் ஓர் மாத்திரை அளவு என்**
**பேரில் குறுகினேன் பின்.**

இப்பாடலை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர அடியேன் எண்ணியதற்கான காரணத்தை இப்போது சொல்லுகின்றேன். முப்பொருள் உண்மையே சைவசித்தாந்தம் . ஆன்மா, சீவன் என்று பெயர் பெறுகின்றது. சீவனின் நிலைகள் மூன்று. அவை கேவலம் சகலம் சுத்தம் என்று பேசப்படும்.

கேவல நிலையில் சீவன் ஆணவ மலத்தினால் பந்திக்கப்பட்டுக் கிடக்கும். இந்நிலையைக் **கல்** என்றும் **பேர் உறக்கம்** என்றும் மணிவாசகர் பேசுவார்.

ஆணவம் என்பது பிறர் கூறும் ஆங்காரம் அன்று **இது உயிரின் குற்றம். இதை The impurity born**

together with the soul, otherwise called anavá, the principle of soul's indivi duation, the term being formed from,அணு,atom,atomic smallness என்று பிரிட்டிஷ் சைவசித்தாந்தி Gordon Matthews விளக்குகிறார்.

ஆணவம் இருள் என்றும், இருட்பாவை என்றும், மலம் என்றும், சகஜமலம் என்றும் வழங்கப்படும். செம்பிற் களிம்புபோல அநாதியே சீவனோடு இணைந்திருப்பது ஆணவமலம். இதனுடைய மறைப்பு ஆற்றலால் ஆன்மா விளக்கம் அற்றுத் தன் விபுத்துவத்தை மறந்து அணுப்பட்டுக் கிடக்கும்.

**ஆன்மா சகச மலத்து உணராது** என்பது சிவஞான போதம். ஆணவத்திலிருந்து ஆன்மா விடுதலை பெறும் பொருட்டே அதனுடன் இறைவன் மாயா கன்ம மலங்களைக் கூட்டுகின்றான். ஒரு மலம் நீங்க இரண்டு மலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அழுக்கினைப் போக்க அழுக்கான உவர்மண் பயன்படுதலை இதற்கு உதாரணம் காட்டுகின்றார்கள். ஆணவமலம் நீக்கத்திற்காகவே மாயையால் ஆன தநு கரண புவனங்கள் படைக்கப்படுகின்றன. தத்துவங்கள் அனைத்துமே மாயா காரியம் (Evolutes of Maya)

கர்மப் புசிப்பை ஏற்க மாயையால் ஆன உடலைச் சீவனுக்குச் சிவன் உதவுகின்றான். இங்ஙனம் உடலோடு கூடிய நிலை சகல நிலை என்று பேசப்படும்.
இச்சகல நிலையில் ஊரும் பேரும் புசிப்பும் பயிற்சியும் சீவனுக்கு உண்டு. நாம் அனைவருமே சகலர். பாச க்ஷயம் பெற்று பதியோடு சீவன் கலக்கின்ற நிலை சுத்தம் ஆகும். சுத்த நிலையே முத்தி நிலை என்கிற அந்தமில் பேரின்பம்.

சகல நிலை அடைந்த உயிர் முத்தியை கேட்டுச் செயல்புரியாது வினையைப் பெருக்கித் தருக்கித் திரிகின்றது. **நான் உண்டு உடுத்து இங்கு இருப்பதானேன்** என்றும், **ஊனார் புழுக்கூடு காத்திங்கு இருப்பதானேன்** என்றும், **பழுதே பிறந்தேன்** என்றும், **வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே** என்றும், **வல்வினை தான் வந்து அடர்வனவே** என்றும், **தலையினால் நடந்தேன்** என்றும், **வெறுப்பனவே செய்யும் என் சிறுமை** என்றும், சகல நிலையை நீட்டிக்கின்ற சீவனின் அவல நிலை பற்றி மணிவாசகர் பேசுகிறார்.

சுத்த நிலை சீவனின் குறிக்கோளும் பிறப்புரிமையும் ஆகும். கேவலத்திலிருந்து புறப்பட்டுச் சகலத்தின் வழியாகச் சுத்தத்தை உயிர் அடைதல் வேண்டும். சித்தாந்த பரிபாஷையின்படி, மறப்பு கேவலம், மறப்போடு சிவணிய நினைப்பு சகலம், கரத்தல் கேவலம், பரத்தல் சகலம் ,இருள் கேவலம், குறைஒளி சகலம், நிறை ஒளி சுத்தம்.

The Sakala stage is a penumbral stage.
இந்த அடிப்படையில் மறப்பு, நினைப்பு,நினைப்பற நினைத்தல் என்ற சொற்களைப் பாருங்கள்.

1. ஆன்மா **மறைந்திட மூடிய மாய இருள்** கேவல நிலையைக் குறிக்கும். மறைப்பின் விளைவே மறப்பு.

2. **அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப் புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை.** என்பது சகல நிலையைக் குறிக்கும்.

3. **வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்** என்பது முமுக்ஷு நிலையைக் குறிக்கும்.

**சித்த மல மறுவித்துச் சிவமாக்கி** என்பது சுத்த நிலையைக் குறிக்கும். மறப்பு கேவலம், மறப்போடு கூடிய நினைப்பு சகலம் நினைப்பற நினைத்தல் சுத்தம். இதைத் தான்,

**இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை நினைப்பற நினைத்தேன்** என்பார் மணிவாசகர்.

மாயையால் ஆன்மா பெறுவது சிறிது வெளிச்சம். சூரிய உதயம் ஆவதற்கு முன்பு விளக்கு ஒன்று காட்டுகின்ற ஒளியைப் போன்றது மாயை தருகின்ற வெளிச்சம்.

**விடிவாம் அளவும் விளக்கனைய மாயை** என்றிதனைத் திருவருட் பயன் பேசும். சுத்த நிலை என்பது பூர்ண சிவ சூரிய ஒளியாகும். அந்தச் சிவ சூரியன தோன்றியதைத் தான் **இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே.** என்ற சொற்கள் காட்டுகின்றன.
சுத்த நிலையில் ஆன்மாவிற்குத் தநு, கரண, புவன

போகங்களோடு ஒட்டுறவு இல்லை. இதைத்தான்

**உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்**
**கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்**
**குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன்குரை கழற்கே**
**கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.**

என்று விளக்குகின்றார்.

**காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற**
**கண்ணிலாக் குழவித் தன்மையே கேவலம்.**

இக் கேவலத்தைச் சகலத்தின் மூலம் பதி போக்குவான். கேவலம் நீங்க நம்மை வந்து உறுவனவே, நம்முடைய உற்றார். இவையே தத்துவ தாத்துவீகங்கள்.

முத்திநெறியாளர் தத்துவ தாத்துவீகங்களை வேண்டமாட்டார். ஊர் வேண்டேன் என்பது புவனத்தை வேண்டாமை. பேர்வேண்டேன் என்பது சீவன் எனும் பெயரைப் பொறுக்காமை. சீவன் சிவனாய் மாறல் வேண்டும். கற்றார் என்பது கல்வி அறிவுடையாரைக் குறிக்கும். கல்வி என்பது இங்குப் பசு- பாச ஞானங்கள். இஞ்ஞானங்களால் இறைவனை அடைய முடியாது.

பதியைப் பதி ஞானத்தால்தான் அறிய, அடைய முடியும். அவன் அருளாலே அவன்தாள் வணங்கல் இதுவே.

இந்தச் சுத்த நிலையே நமது தேட்டம். இதை அடையத்தான் சீவனின் யாத்திரை தொடர்கிறது. இந்த யாத்திரையையும் அதன் பலனையும் சைவ சித்தாந்தம் தசகாரியமாகப் பேசும். இந்தத் தசகாரியமே திருவெம்பாவையிலும் பிரதிஷ்டையாகியுள்ளது.

***பத்துடையீர்! ஈசன் பழவடியீர் பாங்குடையீர்*** என்ற இரண்டாம் திருவெம்பாவைப்பாடலில் இதன் குறிப்பைக் காணலாம்.

தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசக்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் என்று இதன் அமைப்பு இருக்கும்.

சிவபோகம் உற்ற ஆன்மா முத்தான்மா. உடல் இருக்கும்போதே இதை அடைதல் கூடும். சிவபோகம் பெற்ற ஆன்மாவிற்கு உடலோடு எந்த உறவுமில்லை. உடலோடு கூடிய நிலையில் விடுதலைபெற்ற ஆன்மா ஜீவன்முத்தன். உடல் சாய்ந்து போன நிலையில் விதேக முத்தன். இனி இவ்வான்மாவிற்கு,

**சாவிலை மூப்பிலை சாற்றும் பலகோடிச்**
**சங்கிலிப் பிறப்புகள் எதுவுமில்லை**

முத்தியில் பசுவாம் ஆன்மா துய்ப்பது ஆனந்தம், அந்தமில் ஆனந்தம்.

மலங்களை அரித்து ஆனந்தத்தை அளிப்பவன் அரன். விடுதலை உற்ற ஆன்மா

**மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே**

அங்கு அனுபவிக்கப்பெறும் ஆனந்தத்தைச் சொல்லில் உரைக்கமுடியாது.

**அத்தன் எனக்கருளியவாறு**
**ஆர் பெறுவார் அச்சோவே!**
**அம்மை எனக்கருளியவாறு**
**ஆர் பெறுவார் அச்சோவே**

என்று மட்டும் கூறலாம். அமைச்சர் மாணிக்கவாசகர் அடிகள் மாணிக்கவாசகர் ஆன வரலாறு எல்லோருக்கும் தெரியும்.

ஆலமர் செல்வன், திருப்பெருந்துறையிலே ஒரு குருந்த மரத்தின் நிழலில், தன் சீடர்கள் புடைசூழ அமர்ந்திருந்தான். கடல் ஒலி என முழங்கிய ஹரஹர சப்தம் கேட்டு பரிகள் வாங்குவான் வேண்டிப் பல லட்சம் பொன்னுடன் அங்கு வந்து கொண்டிருந்த மணிவாசகர், முன்னம் அவன் நாமம் கேட்டார்: அருகில் சென்று மூர்த்தி இருக்கும் வண்ணம் கண்டார். பின்னர் அவன் ஓதிய சிவஞானபோதம் கேட்டார்.

**சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ் ஞானம்**
**தவமுதல்வர் வாதவூரர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்**

என்றே இதை வர்ணித்தல் தகும்.

அன்னையை, அத்தனை, அரசனை மறந்தார். அகன்றார், அகலிடத்தார், ஆசாரத்தை எல்லாம்: தம்மை மறந்தார், தலைப்பட்டார் தலைவன் தாளுக்கே. இறையருள் பிடர்பிடித்து உந்த, பூத பரம்பரை பொலிய, அருட்பாக்களை வழங்கலானார் ஆளுடைய அடிகள். இவ்வருளிச் செயலே எட்டாந்திருமுறை. எட்டாந் திருமுறையில் குறிப்பாகத் திருவெம்பாவையில்

1. பதிமுது நிலையும் 2. உயிரவை நிலையும். 3. இருள்மல நிலையும். 4. அருளது நிலையும் 5.

அருள் உரு நிலையும் 6. அறியும் நெறியும் 7. உயிரின் விளக்கமும். 8. இன்புறு நிலையும் 9. அஞ்செழுத்து அருள் நிலையும் 10. அணைந்தோர் தன்மையும் தெளிவாக உணர்த்தப்படுகின்றன.


நாதன் நாமம் நமசிவாயவே என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றோம். ஐந்தெழுத்து அவன் பெயர். ஐந்தொழில் அவன் தொழில். ஐந்து முகங்கள் அவன் முகங்கள்.

இந்த ஐந்து என்ற எண்ணோடு நமக்கு நெருங்கிய சம்பந்தம் உண்டு. ஆன்மா பஞ்ச கஞ்சுகன். பஞ்ச கிலேசன். பஞ்ச அவஸ்தை உடையவன்.

ஐந்து அவத்தைகள் உடைய சீவன் ஐந்தொழில் வல்லவனாம் சிவனோடு அத்துவித ஐக்கியம் பெறுதல் வேண்டும் என்பதே பாவையின் சித்தாந்தம். இதற்கான பாதையை வகுத்துரைக் கும் நூலே சிவஞானபோதம்.

(அடுத்த இதழில் முடியும்...)





# ஞானம்

ஞானத்தைப் பெறுவதற்கான உபாயம் ஒன்றே உளது. மனதை ஒருமுகப்ப டுத்துவதுதான் அந்த உபாயம். ரசாயன சாஸ்திரி ஒருவன் தனது ஆராய்ச்சி சாலையிலே தன் மனோ சக்திகள் யாவையும் ஒருமுகப்படுத்தித் தான் ஆராய்ச்சி செய்யும் பொருள்க ளின்மீது ஒருமுகப்படுத்தப்பட்ட மனதைச் செலுத்துகிறான். அதனால் அப்பொருள்களைப் பற்றிய மர்மங்களை அவன் அறிந்து கொள்ளுகின்றான். வானசாஸ்திரி ஒருவன் தனது ஒருமுகப்பட்ட மனதை தூரதிருஸ்டிக் கண்ணாடியின் மூலமாக வானத்தின் கண் செலுத்துகின்றான். நட்சத்திரங்களும், சூரியனும், சந்திரனும் தமது உண்மை வரலாறுகளை அவனுக்கு வெளிப்படுத்துகின்றன. தான் பேச விரும்பும் ஒரு விடயத்தின்மீது மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு மனதை ஒருமுகப்படுத்துகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அதன் உட்பொருளை அவன் நன்கு விளக்க முடியும். புகட்டப்படும் விஷயமொன்றைக் கேட்கின்றவன் எவ்வளவுக்கெவ்வளவு மனதை ஒருமுகப்படுத்திக் கேட்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அவன் அவ்விடயத்தைத் தெளிவுறக் கிரகித்துக் கொள்வான்.

***சுவாமி விவேகானந்தர்***

# இந்துசமயம்


## சிறி ரமண மகரிஷி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ரமணரின் தாயார் வசதியேற்படும் போது எல்லாம் திருவண்ணாமலைக்கு வந்து சென்றார். ஆதரவற்ற ஒரு நிலையில் இறுதி நாட்களை திருவெண்ணாமலையில் 1891 இல் இருந்து கழித்தார். மனைவியை இழந்த அவருடைய இளையமகன் நாகசுந்தரம் அவருக்கு உதவியாக வந்து சேர்ந்தார். அழகம்மாள் எல்லோருக்கும் சமைத்துப் போட்டார். ரமணர் மீது மிகவும் அக்கறை செலுத்துவார். அப்போதெல்லாம் ரமணர் விலகிச் செல்வார். ஏதேனும் கேட்டால் பதில் பேசமாட்டார். தாயாரிடம் அவர் மட்டும் தமது தாயாரல்ல எல்லாப் பெண்களுமே தமக்குத் தாயார்கள் தான் என்று ஒரு தடவை கூறினார். ஆனால் தாயாருக்கு சுகவீனம் ஏற்பட்ட போது மிகவும் பொறுப்போடு கவனித்தார். 1922 மே மாதம் 19 ஆம் திகதி இரவு 8 மணிக்கு அழகம்மாள் உயிர் பிரிந்தது. அன்று முழுவதும் சாப்பிடாமல் தாயின் அருகே இருக்க சிஷ்யர்கள் பஜனையும் வேதபாராயணமும் செய்தனர். இரவு அனைவரும் திருவாசகம் பாடினர். தாயார் பிரிவு குறித்து அவர் சஞ்சலப்படவில்லை. ஆசிரம வளாகத்திலேயே உடல் புதைக்கப்பட்டது. தாயார். புதைக்கப்பட்ட இடத்தில் முதலில் கல்லறை கட்டப்பட்டது. பின்னர் நிரஞ்சனானந்தரின் முயற்சியால் இதே இடத்தில் 1938 இல் முதலில் கல்லறைஆரம்பிக்கப்பட்டு 1949இல் கட்டி முடிக்கப் பட்டது. மாத்ருபூதேவஸ்வரை ஆலயம் என்று பெயரிடப்பட்டது. பகவான் ரமணரின் முன்னிலையில் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக

க. குணரத்தினம்

நிறைவேறியது ரமணர் தாயார் உடன் பிறந்தார். என்பவரைப் பொறுத்த அளவில் ஒரு பற்றற்ற நிலையையே கடைப்பிடித்தார்.



அருணாசலத்தில் பல இடங்களில் பல குகைகளில் சுவாமிகள் வசித்துள்ளார். 1900 முதல் 1922 வரை மலையிலேயே தங்கி இருந்தார். எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான தவ வாழ்க்கையைத்தான் மேற் கொண்டார். எப்போதும் தன் சொரூபத்திலோ தியானத்திலோ ஆழ்ந்திருந்தார். அன்பர்கள் பலர் கேட்கும் ஆன்மீக வினாக்களுக்கு விடையளித்தார். ஆன்மீகம் சம்பந்தப்பட்ட நூல்களில் தமக்கு விளங்காத பகுதிகளுக்கு சுவாமிகளிடம் விளக்கம் கேட்பார்கள். நூலை வாங்கிப்படித்து எவரும் எளிதில் விளங்கிக்கொள்ளுமாறு விளக்குவார். துறவறம் பூண்டபின் பல சமயசம்பந்தமான நூல்களைப் படித்திருக்கிறார். சங்கராச்சாரியார் எழுதிய விவேக சூடாமணி என்ற நூலையும் படித்திருக்கிறார். எல்லாம் பல அன்பர்கள் கொண்டுவந்தவை.

திருவண்ணா மலையில் பத்மநாப சுவாமிகள் என்பவர் வாழ்ந்து வந்த ஆச்சிரமத்தில் பல்துறைநூல்கள் இருந்தன. அங்கு சென்று நூல்களை எடுத்துப் படிப்பார். அந்த நூலில் பத்மநாப சுவாமிகளோ பிறரோ ஐயங்கள் கேட்டால் தீர்த்து

வைப்பார். சிலர் கேட்கும் வினாக்களுக்கு விளக்கங்களை ஒரு பாடல் ரூபமாகவோ அல்லது மிகவும் எளிமையாக விளங்கும் வகையில் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தார். இவற்றை எல்லாம் சேர்த்துப் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அறிவாற்றல் நிரம்பிய கணபதி சாஸ்திரிகள் என்பவர் மந்திர செபம் மூலம் தெய்வீகத்தை அடையமுடியும் என்று நம்பி இடைவிடாது மந்திர செபம் செய்து வந்தார். தபசுகளைச் செய்து கடவுளையே தம்முன் தோன்றச் செய்யவேண்டும் என்ற வைராக்கியத்தோடு பல தலங்களையும் தரிசித்து வந்தார். திருவண்ணாமலைக்கு வந்தபோது சுவாமிகளை நாடி, **சுவாமி! உண்மையான தபசு எது? என்று அடியேனுக்கு விளக்கவேண்டும்** என்று கேட்டார். **நான் நான் என்பது எங்கிருந்து புறப்படுகிறதோ அதைக் கவனித்தால் மனம் அங்கே சென்று ஒடுங்கும். அதுவே தபசு ஆகும்** என்று சுவாமிகள் விளக்கம் கூறினார். சாஸ்திரிகளின் ஐயங்கள் நீங்கின.

சுவாமிகளைப் புகழ்ந்து பாடினார். சுவாமிகளின் திருப்பெயரைப் பாடலில் ரமணர் என்று குறிப்பிட்டார். சுவாமிகளின் உபதேசங்கள் முற்றிலும் புதியவை. நூல்களில் காணப்படாதவை. எனவே சுவாமிகளை மகரிஸி என்றே அழைக்கவேண்டும் என்று பலருக்கும் வேண்டுகோள் விடுத்தார். அன்றுமுதல் பகவான் ரமண மகரிஷி என்று உலக மக்களால் சுவாமி அழைக்கப்பட்டார். சிஷ்யர்களுக்கு மகரிஷி கூறிய உபதேசங்களையும் ஐயங்களுக்கான பதில்களையும் தொகுத்து ரமண கீதை என்ற நூலை சாஸ்திரி வெளியிட்டார்.

இளம் வயதிலேயே கணவன் பிள்ளைகளை இழந்த எச்சம்மாள் என்பவர் ரமணரைத் தரிசித்தபின் மனச் சுமைகள் நீங்கியதாக உணர்ந்தார். யோகப் பயிற்சியில் அனுபவம் பெற்ற இவர் அடிக்கடி சமாதி நிலையில் இருப்பதுண்டு. இதனை அறிந்த பகவான் ரமணர் இந்தச் செயல்களால் நீ உண்மையான குறிக்கோளை அடைய முடியாது. உன்னையே நீ அறிவதுதான் உன்னுடைய குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று உபதேசித்தார். எச்சம்மாள் யோகாப்பியாசம் செய்வதை விட்டுவிட்டார். போல் என்ற ஆங்கிலேயர் ரமணரிடம் நீங்கள் யோகம் பற்றிப் போதிப்பதில்லையா என்று கேட்டார். யோகி என்பவர்தான் விரும்பும் உயர்ந்த குறிக்கோளை அடைவதற்காக மாட் டைக் கம்பால் அடித்து ஓட்டுவதுபோல் தன் மனத்தை விரட்டுகிறார். ஆனால் ஆன்மீக வாழ்க்கை வாழவிரும்பும் இல்லற வாசிகள் கையில் புல்லை வைத்துக் கொண்டு மாட்டினிடம் அதைக் காண்பித்து அதை அழைப்பதுபோல் மனத்தைத் தன் இச்சைக்கு கொஞ்சம் கொஞ்சமாக இழுக்கிறார்கள் என்று பதிலளித்தார் ரமணர்.

ரமண மகரிஷி சமூக மத அரசியல் வேறுபாடு களுக்கப்பாற்பட்டவராக விளங்கினார். பிராமணர் அல்லாதார், ஆடவர் பெண்டிர் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவரிடமும் சமமாகவே பழகினார். ஒரு அன்பர் பெண்களும் பிராமண ரல்லாதாரும் ஆன்மீகப் பெருவாழ்வில் ஈடுபடலாமா, அவர்களும் தன்னை உணரும் நிலையில் பயிற்சி பெறலாமா? சமாதி நிலையில் இருக்கப் பழகிக் கொள்ளலாமா? என்று கேட்டார். ஓ! தாராளமாகச் செய்யலாம். ஆன்மீக வாழ்க்கையின்பாற்பட்ட தன்னை உணரும் பயிற்சிக்கு சாதி, சமய, இன, மொழி பால் வேறுபாடுகள் கிடையாது என்று சுவாமி பதிலளித்தார்.

உலக வாழ்க்கையை மேற்கொண்ட நிலையில் குடும்பத்திலிருக்கும்போதே ஆன்மீக வாழ்வை மேற்கொள்ளமுடியவில்லையே என்று சில அன்பர்கள் கேட்டார்கள்.

இராமபிரான் ஆன்மீக நெறிப்படி வாழ்ந்து காட்டவில்லையா? இராமபிரான் உலக காரியங்களைப் புரியவில்லையா? உலக காரியங்களைப் புரிவதற்கும் ஆன்மீக வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லை. மனதில் தூய்மையாக இருந்து இறைவனுக்கு அர்ப்பணித்து உடலால் நீதிமுறை தவறாமல் உலக காரியங்களை ஆற்றிவரவேண்டும் என்று கூறுவார்.

(தொடரும்.....)



**ஓம் நமசிவாய**

It's Simple with Dimple


# HIRE OF CARS VANS & MINIBUSES

SUPPLIERS OF PRESTIGE & OTHER VEHICLES

SALES - SERVICE - CRASH REPAIRS, SPECIALISTS IN EXPORTS TO AFRICA, HEAVY & LIGHT COMMERCIALS




**TEL: 0181 205 1200**




**16-19 VARLEY PARADE**
**EDGWARE ROAD**
**COLINDALE**
**LONDON NW9 6RR**
**TEL: 0181-205 1200**
**FAX: 0181-200 7426**

**653 HIGH ROAD**
**NORTH FINCHLEY**
**LONDON N12 0AA**
**TEL: 0181-446 8499**
**FAX: 0181-446 8415**






# AYNGARAN ENTERPRISE

## ஐங்கரன் என்ரபிறைஸ்



**(WHOLE SALE AND RETAIL)**
80 Burlington Road
( Opp. DSS Office)
New Malden, Surrey KT3 4NY

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதற்கு இன்றே நாடுங்கள். நம்பிக்கை நாணயம் உத்தரவாதம் இவை எமது தாரக மந்திரம். எம்மிடம் இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஓடியோ வீடியோ சீடீக்கள் யாவும் கிடைக்கும்

**Tel : 0181 942 1561, 0831 823087**
**Fax : 0181 296 8778**

# திருவாசகம் ஓதுவோம்

- திருமதி. க. கந்தசாமி

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப் பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக்கடலாய் வெள்ளத்தே
*-திருச்சதகம்*

நாம் காலை மாலை தியானம் செய்யும்போது நால்வர் அருளிய அருட்பாக்களை ஓதுவோம். எமது மன இருளை அகற்றி, மலத்தைக் கெடுத்து உள்ளொளி பெருக்குவது திருவாசகம். கற்றோர், கல்லாதோர் யாவரையும் மெய்மறக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி. திருவாதவூரடிகள் இறை அருளால் உதித்த ஓர் செழுமறை முனிவர். பாண்டிய மன்னனின் மந்திரியாக இருந்தார். மந்திரிப்பதவியை, உலக வாழ்வில் ஒட்டாது **ஓடும் புளியம் பழமும்** போல வகித்து வந்தார். எந்நேரமும் மனதில் தன்னை ஆட் கொள்ளும்படி இறைவனை வேண்டினார். இறைவன் வாதவூரரை ஆட்கொள்ளத் திருவுளம் கொண்டார். அரசனும் திருவாதவூரரைக் குதிரை வாங்கும் பொருட்டுப் பெருந்தொகையான திரவியத்தைக் கொடுத்து திருப்பெருந்துறைக்கு அனுப் பினான். கருணாமூர்த்தியாகிய பரமசிவன் திருப்பெருந் துறையில் குருந்த மரநிழலில் ஞானாசாரியாராகச் சீடர்களுடன் எழுந்தருளினார். இறைவன் திருவருள் கைகூடியமையால் வாதவூரர் ஞானாசாரியாரைச் சரண் அடைந்தார். இறைவனும் அவரை ஆட்கொண்டு ஞானோபதேசஞ் செய்தருளினார்.

**நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நமவெனப் பெற்றேன்**
**தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்**
**தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்**
**ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே**
**வெறுத்திடவே**

இப்பாடல் இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்டு அருளியதை உணர்த்துகின்றது.

வாதவூரடிகள் இறைஅருள்வழி நின்று அரசன் கொடுத்த திரவியம் முழுவதையும் ஆலயம் கட்டுவதற்கும் சிவனடியார்க்கும் செலவு செய்து இறை அருளைச் சிந்தித்துக் கொண்டிருந்தார். இதனைக் கேள்வியுற்ற அரசன் திருவாதவூரரை அழைத்துத் தண்டித்தான். அடிகளின் துயர் துடைக்கத் திருவுளம் கொண்ட எம்பெருமான் நரிகளைப் பரிகளாக்கித் தான் குதிரைச் சேவகனாக மதுரைநகர் வீதியில் எழுந்தருளினார். முறைப்படி அரசனிடம் குதிரைகளை ஒப்படைத்தார்.

**இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கி**
**கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை உன் கழலிணைகள்**
**ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிக ளெல்லாம்**
**பெருங்குதிரை ஆக்கிய வாறன்றோ நின் பேரருளே**

மாணிக்கவாசகர் இறைவன் கருணையில் திளைத்து இருக்க அன்றிரவே குதிரைகளெல்லாம் நரிகளாகி லாயத்தில் நின்ற குதிரைகளையும் கடித்துக் குதறிவிட்டு காட்டிற்குள் ஓடி மறைந்தன. அரசன் பெரும் சீற்றங்கொண்டு மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்தான். பரம்பொருளைத் தஞ்சமென அடைந்த மாணிக்கவாசகர் இறைவனே கதி என்றிருந்தார். பரமபிதாவும் வைகை நதியைப் பெருக்கெடுக்கச் செய்தார். வைகையும் புரண்டோடி மதுரை மாநகரை அழித்தது. அரசன் மனங் கலங்கினான்.

**என் நீதி கோடியதோ? இன்றேல் ஆலவாய் அண்ணலின் பூசையில் ஏதேனும் குறைவிட்டேனா?**
என்று கலங்கினான். மன்னனும் மக்களை வைகையின் கரைகளை அடைக்கும்படி கட்டளையிட்டான். சகலரும் தம் பங்கினை அடைக்கத் தொடங்கினர்.

செம்மனச் செல்வி என்னும் மாது யாருமற்றவள். ஆலவாய் அண்ணலை வேண்டினாள். எம்பெருமான் திருவிளையாடல் புரிய மதுரைவீதியில் கூலியாளாகத் தோன்றினார். அம்மையின் பங்கைத் தான் அடைப்பதாகத் திருவாய் மலர்ந்தருளிப் பிட்டைக் கூலியாக ஏற்றுக்கொண்டு வைகை நதிக்கரையை

அடைந்தார். திருவிளையாடல் புரிந்தார். சேவகர்களின் பிரம்படிக்காளானார். இறைவனாகிய கூலியாள் மேற்பட்டஅடி அரசன் மேலும் பட்டது. சகல ஜீவராசிகளின்மீதும் பட்டது. அரசன் அதிர்ச்சி உற்றான். உண்மையையும் உணர்ந்தான். வாதவூர டிகளின் பாதங்களின்மேல் விழுந்தான்.

சிவபுராணம் சிவனது அனாதி முறைமையான தன்மைகளையும் ஜீவராசிகள் பிறந்து இறந்து உழலும் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. இறைவனின் பாதத்தைச் சரண் புகுந்தால் பிறப்பை அறுத்து வீடு பேறடையலாம் என்பதை உணர்த்து கின்றது.

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி**
**பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்அசுரர்ஆகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅநின்ற இத்தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான்**
**மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்**

கீர்த்தித் திருவகவலில் உள்ள சில அடிகள் இறைவனின் பெருங்கருணையை உணர்த்துகின்றது.

**அரியொடு பிரமற்கு அளவுஅறி ஒண்ணான்**
**நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்**
**ஆண்டு கொண்டருளி அழகுறு திருவடி**
**பாண்டியன் தனக்குப் பரிமா விற்று**
**ஈண்டு கனகம் இசையப் பெறா அது**
**மதுரைப் பெருநன் மாநகர் இருந்து**
**குதிரைச் சேவகனாகிய கொள்கையும்**
**ஆங்கது தன்னில் அடியவர்க்காகப்**
**பாங்காய் மண் சுமந்தருளிய பரிசும்**

திருவாசகம் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சிக்கு உதவுகின்றது. எமது உடம்பை வளர்க்க உணவும் வேண்டும், மருந்தும் வேண்டும். தேன் நமக்கு உணவாகவும் மருந்தாகவும் உதவுகின்றது.

திருவாசகத்தேன் நமது கவலைகளைப் போக்கி ஆன்ம முன்னேற்றத்திற்கு வழிசமைக்கின்றது. நம் மூதாதையர் என்றும் எப்பொழுதும் பாடிப் பரவசமடைந்த பாடல் திருவாசகம் ஆகும்.

**யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பெனக்கென் கடவேன்**
**வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்**
**தேனேயும் மலர்க் கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்**
**மானே யுன்னருள் பெறுநாள் என்றென்று வருத்து வனே**
**பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே**
**பற்று நான் மற்றிலேன் கண்டாய்**
**சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே**
**திருப்பெருந்துறை உறை சிவனே**
**ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்**
**ஆண்ட நீ அருளிலை யானால்**
**வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்**
**வருக என்றருள் புரியாயே**

தில்லையம்பலக் கூத்தனே மாணிக்கவாசகரைத் திருவாசகம் பாட அருள் செய்தார். திருவாசகத்தைத் தன் கைப்பட எழுதிக் கைச் சாத்திட்டு சிதம்பரத்தில் வைத்து அருளினார்.



தில்லைவாழ் அந்தணர் மாணிக்கவாசகரிடம் திருவாசகத்தின் உட்பொருளை வினாவினார்கள். திருவாசகத்தின் உட்பொருள் தில்லைக் கூத்தனே என்று சுட்டிக் காட்டி இறைவனோடு இரண்டறக் கலந்தருளினார்.

உலக மக்களாகிய நாம் உய்யும் பொருட்டே இறைவன் மாணிக்கவாசகரைக் கொண்டு திரு வாசகம் பாடுவித்தார். திருவாசகம் உலக வாழ்க்கையாகிய நீண்ட பயணத்திற்கு ஊன்று கோலாகவும் என்றும் எப்பொழுதும் வழித்து ணையாகவும் தனிமைத் துன்பத்தை நீக்கவும் உதவவும் மாமருந்து. எமது இல்லங்கள் தோறும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம் திருவாசகம். எமது கவலைகள் நீங்கி மனம் சாந்தி பெறக் காலை, மாலை திருவாசகம் ஓதிப் பிறவிப் பெருங்கடலைக் கடப்போம்.

**தொல்லை இரும் பிறவிச் சூழுந் தளை நீக்கி**
**அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே- எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னுந் தேன்**

# ஆன்மீகக்கவிஞர் பாரதியின் கொள்ளுப்பேரன் ராஜ்குமார் பாரதி யுடன் ஒரு செவ்வி

## கண்டு கேட்பவர் சாலினி:

**சாலினி:** *உங்களுக்கும் மகாகவி பாரதிக்கும் உள்ள உறவு முறையைக் கூறமுடியுமா?*

**ராஜ்குமார்பாரதி:** பாரதிக்கு இரண்டு மகள்மார். மூத்தவ தங்கம்மா பாரதி. இளையவ சகுந்தலா பாரதி. தங்கம்மா பாரதியின் இரண்டாவது மகள் என்னுடைய அம்மா. நான் பாரதியின் பேத்தி மகன்.



**சாலினி:** *உங்களின் மரியாதைக்குரிய ஒரு வரைக் கூறமுடியுமா?*

**ராஜ்குமார் பாரதி:** பாரதி. அவரே எனது வழிகாட்டி. எனது கொள்ளுத்தாத்தாவாக இருந்தாலும் வெளி ஆளாக இருந்து பார்க்கும்போது அவ ரின் ஆன்மீகபார்வை எனக்குப் பிடிக்கும். அவர் ஒரு சுதந்திர தேசியக் கவிஞர் என்பது உண்மையானாலும் என்னைக் கவர்ந்த ஆன்மீகக் கவிஞர் அவர்.

**சாலினி:** *பாரதியின் வாரிசு என்ற முறையில் தரப்படும் மதிப்பையா உங்களுக்காகத் தரப்படும் மதிப்பையா நிங்கள் மதிப்பீர்கள்?*

**ராஜ்குமார் பாரதி:** பாரதியின் கொள்ளுப்பேரன் என்ற முறையில் தரப்படும் மதிப்பையே நான் விரும்புகின்றேன். ஏனென்றால் பெரிய மகானின் வம்சத்தில் பிறக்க கொடுப்பினை இருக்கவேண்டும். அதைப் பெரிய பாக்கியமாகக் கருதுகின்றேன்.

**சாலினி:** உங்கள் மேலை நாட்டுப் பயணத்தில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய நிகழ்வுகள் பற்றிச் சிறிது கூறுங்கள்?

**ராஜ்குமார் பாரதி:** பி.பி.சி ஏற்பாடு செய்திருந்த ஒரு கலைவிழாவில் கலந்து கொள்ள 1992ல் லண்டனுக்கு முதன்முதல் வந்தேன். இது மிகவும் சிறப்பான முறையில் அமைந்த ஒரு கலைப்பயணம். லண்டனுக்கு ஐந்துஆறு தடவை வந்திருக்கிறேன். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் போனாலும் தங்கள் கலாசாரம் மறையக் கூடாது என்பதற்காக பெற்றோர்கள் எடுக்கும் முயற்சியை இங்கு கண்கூடாகப் பார்க்கிறேன். அதில் இலங்கைத் தமிழர் பெரிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் எடுக்கும் முயற்சியில் இசைக் கலைஞனாக நானும் என் பங்கைச் செலுத்த விரும்புகின்றேன்.

**சாலினி:** *பாரதி சக்தி உபாசகரா? அல்லது கண்ணன் உபாசகரா?*

**ராஜ்குமார்பாரதி:** அவருக்கு எல்லாமே ஒன்றுதான். வருவாய் வருவாய் வருவாய் கண்ணா என்ற பாடலில் தொடுவேன் சிவனாம் நினையே கண்ணா எனப் பாடுகின்றார். அந்தப் பரிணாமத்தில் பார்க்கும்போது கண்ணன் உபாசகராகவும் சக்தி உபாசகராகவும் தெரிவார்.

**சாலினி:** *பாரதி செய்த பக்தி நூல் என விநாயகர் நான் மணிமாலையைக் கொள்ளலாம். அதை எங்கே பாடினார். ஏன் அதற்கு நான் மணிமாலை எனப் பெயர் வைத்தார்?*

**ராஜ்குமார் பாரதி:** தமிழில் உள்ள பாடல் வகைகளில் வெண்பா, கலிப்பா, விருத்தப்பா, அகவற்பா என்ற நான்குவகைப் பாடல்களாலும் பாடப்பட்டது. இந்த நான்கு பா மணிகளாலும் கோர்க்கப்பட்டதால் இதற்கு விநாயகர் நான்மணிமாலை எனப் பெயர் வைத்திருக்கிறார். இது ஒரு அந்தாதியும் கூட. இதன் ஒவ்வொரு பாடலின் முடிவும் அடுத்த பாடலின் தொடக்கமாக வரும். இது புதுச்சேரியில்

இருந்தபோது பாடப்பட்டது. அங்குள்ள மணக்குள விநாயகருக்குப் பாடியது. பாண்டிச்சேரியில் உள்ள ஒரு அற்புதமான கோயில் இது.

**சாலினி:** *அதில் வாயே திறவாத மௌனத்திருந்துன் மலரடிக்கு தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே எனப் பாடுகின்றார். அப்படி மௌனத்தி லிருந்துதான் பாடினாரா?*

**ராஜ்குமார் பாரதி:** ஆமா. அப்படிப் பாடியிருக்க முடியும். இரண்டு மூன்று இடத்தில் கேட்டிருக்கிறார். நீங்கள் அந்த விநாயகர் நான்மணி மாலையைப் பாருங்கள். நினைக்கும்போது நின் மவுன நிலை வந்திட நீ செயல் வேண்டும் என்கிறார். மவுனம் என்கிறது அமைதி. எந்தவித சலனமும் இல்லாத நிலை. தெய்வ நிலை. மோன நிலையில் ஏற்படக்கூடிய உயிர்த் துடிப்பான வார்த்தை அது. அவர் அதை அனுபவித்துத்தான் எழுதியிருக்கிறார். இல்லாவிட்டால் இந்தப் படைப்புக்களைக் கொடுத்திருக்க முடியாது.

**சாலினி:** *பாரதி பெண்கள் விடுதலைக்குப் பாடுபட்டவர் அவர் கனவு நனவாகி இருக்கின்றதா?*

**ராஜ்குமார் பாரதி:** எங்கம்மா சொல்லுவாங்க, எங்க தாத்தா தங்கம்மா பாட்டிக்கு சின்னவயதில் வாள் பயிற்சி சண்டைப் பயிற்சி எல்லாம் சொல்லிக்கொடுத்து ஆண் குழந்தை மாதிரி வளர்த்தாராம். இப்ப பெண்களைப் பொறுத்தவரை நிறைய முன்னேறி இருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது. வளர்ச்சி என்று வரும்போது தவறு வருவது இயற்கை. அந்தத் தவறு இங்கும் நடந்திருக்கிறது. அதாவது உரிமை என்றால் என்ன? எதில் சுதந்திரம் என்பதைப் புரிந்து கொள்ளாமல் அவர் கருத்தை தவறாகப் பயன் படுத்துவது நடைமுறை வாழ்வில் எதில் எமக்கு சம அந்தஸ்து வேண்டும். எப்படிப் பயன் படுத்தலாம் என்பதை ஓரளவில் இவர்களும் உணர்ந்து நடந்தால் அது சமுதாயத்திற்கு நல்லது.

**சாலினி:** அவரின் வாரிசு என்ற முறையில் பெண்களின் முன்னேற்றத்திற்கு நீங்கள் ஏதாவது செய்கிறீர்களா?

**ராஜ்குமார் பாரதி :** இந்தக் காலத்தில் நிறைய உண்டு. நான் தனிப்பட்டமுறையில் ஈடுபடவில்லை . ஆனால் என் மனைவியை நான் பார்க்கக்கூடிய பெண்களை நல்ல இடத்தில் வைத்து நடத்துகின்றேன்.

( இன்னும் வரும்.....)


# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

Legal Aid

THAMIL HOUSE
720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters to appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

# குமரன்ஸ்
தமிழ்க்கடை

KUMARANS

உங்களுக்குஅன்றாடம்
தேவையான லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு
தொகையாக வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்.

# KUMARANS

# CHILDREN'S KALASAM

**The following pages contain features and articles for and by children, hence are placed in the middle of the magazine. Children can remove these pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show. We welcome views and suggestions from children and parents.**

**- Editor -**

**To make the children's Kalasam more appealing of relevant to our younger generation living in the western world, we need direct input of the youth in the Kalasam Editorial commitee. If you are able to contribute in anyway in this respect please contact**

**Mr M. Natkunathayalan- The Editor on 0181 550 4233**

# THAI PONGAL

**Month- Thai**

## Occurrence

There are two halves in a year called Uttarayanna ( January 15 th to July 15th)and Dhakhshanayanna whereby the sun moves from South to North. This journey to the North is considered auspicious. The first day when the sun moves North is called Makara Sankranti or Pongal by Tamilians. That is the day when the sun passes from the ninth sign of the zodiac(Rasi) to the tenth sign the Makara rasi. This is in the Tamil month of Thai ( January- February)

## Observance

The pongal festival in Tamil Nadu consists of a four day celebration. The Sun-God (Surya) is invoked on a traditional lamp anda a Puja is performed,A new clay pot is decorated with ginger and turmeric stalks with the rhizomes tied around its neck. Kolam and sacred ash marks are placed on this pot. Newly harvested rice is cooked in this new pot over an open fire in the front yard of the house. Stove is made of bricks, The rice is boiled in milk, when it boils and overflows the family members gather and shout "Pongalo pongal"
( to cook and overflow) . The rice is cooked with the correct quantity of water and milk. The excess water is not drained off. The ladies of the house light lamps with ghee. The whole process of cooking as well as the puja are done in an open yard of the house to signify the worship is direct to the Sun-God(Surya) when the sun is directly over the head and the puja is usually done between the hours of 11.00am and 1pm.

In Tamil Nadu, Pongal is closely connected with agriculture. It is an occasion of joy for all and also the sharing of the harvest with the workers. To the agriculturalist he brings home the fruit of his toil. The master is not allowed to grab all the harvest for himself. Pongal is the festival during which the landlords distribute food, clothes and money to the workers.

" Be charitable and generous, treat your servants as your friends and co-workers. This is the keynote of the pongal festival. Symbolically the first harvest is offered to the Almighty.

The sun itself symbolises all that the Pongal festival stands for. It is the message of light, unity, impartiality and true selflessness. Without the sun, life would perish on earth. Pongal is a period of thanksgiving.

Special prayers are conducted in temples. On pongal day sweet Pongal rice and other varieties of vegetarian dishes are prepared. There is a family reunion in all homes. Brothers and sisters renew their ties with the married ones who have gone away to live with their husbands or wives. Pongal is a period of thanksgiving where the entire communities relax after a whole year of struggle with the wind, rain and the sun. Now the people express their gratitude to the Almighty.

In Malaysia majority of the homes perform their pongal celebration,that is cooking the rice in milk(Pongal) in the mornings. After that the family is served with all the varieties of vegetarian dishes followed by puddings (payasam), vadai, sakkarai sadam( sweet rice) sugar cane and bannnas for lunch. In the evening they visit the nearest temple for the special pujas. Most of the temples in the towns are crowded on this day.

The main characteristics of the pongal celebration of TamilNadu is still carried out in many Hindu homes, here though different social and economic environment of the people here have changed a little of the traditional celebrations.

Pongal celebration is popular in Malaysia , in rural areas as well as in the cities. In the cities, cultural shows are a popular feature of Pongal. Many Hindu organisations and Tamil Language Societies put up these cultural shows in order to promote and preserve the Tamil culture.

## SPECIAL FEATURES OF THAI PONGAL

The day before Pongal is known as the Bhogi festival. On this day old worn out and dirty things in the house are discarded and burnt, houses are cleaned and white washed. Beautiful kolams with rice-flour are drawn in and outside the houses.

Every family rich or poor must buy clay pots. Another feature in Indian villages is that the carpenter supplies a spatula (wooden spoons) and a Ladle. . the ladle is a very simple spoon made of coconut shell cup attached to the end of a small bamboo stick. It is used for serving milk or puddings.

The stove is also set up by each family on the previous day by arranging a few new clay bricks and plastered with cowdung paste which is dried in the sun in Indian villages. This feature is completly missing in Malasia Three such stoves are made to provide for three pots to be cooked at the same time for milk, rice and vegetables separately. The sugar cane is also an important item for the celebration of Pongal.

## MATTU PONGAL

The Pongal festival in Tamil Nadu is a festival of four days . The first day is the Bhogi festival for Indian. The second day is the Pongal day- a day for Surya. The third day is dedicated to the cows- the mattup Pongal, and the fourth is a day of games and sports for adults.

Mattup pongal is a day of reverence to the cattle. The cattle had been glorified as the giver of all things to human beings. the cow gives man milk while the bull is used for transportation. In Saivaism the bull is the mount of Lord Siva.

The cow is the most auspicious object for any good act. Even today the ritual of taking a cow with its calf into a newly built house is carried out during Graha Pravesam or New home warming ceremony.

On this day the cattle are given a bath, and their homes are polished and painted. Garlands are put around their necks . After praying to the Surya or Sun-God, a complete puja is performed for the cows. A cow is chosen and it receives all the pujas on behalf of the others. The cow is then fed with food., rice and fruits. After the puja the entire family have their lunch.

## KANNI PONGAL

The fourth day of the group of Pongal celebration is known as Kanni pongal, also called karinal, an inauspicious day. Therefore no good activity is done on this

day. So the entire village puts on a holiday mood and sets this day for rural sports and games like Chadu-gudu. The fourth day ends the pongal festival which is truly a social festival where the people are in a holiday mood.

-GOMATHI THIRUVASAGAM-

# MAHA SIVARATHRI

Month- Masi

## OCCURRENCE

This festival is of great importance to saivites. This occurs on the thirteenth night (Krishnapaksha ) of the tamil month masi (February- March ). Lord Siva is believed to be present and to manifest himself in all the sivalingas on this particular day.

## OBSERVATION

This festival is observed as a day of complete FASTING for Saivites. They include fasting for the hole day and keepvigil.(Stay awake for the whole night) breaking the fast the next morning.

## CELEBRATIONS

All devotes, after having a bath , gather in a temple to prepare for the Siva pujas throughout the night.

This night is divided into four quarters whereby the priest does abhishekams four times in the right and offers four different kinds of floral archanas and four different rice (food) offerings during the four quarters of the night to Lord Siva. For the first quarter of the night, the flower is the lotus and the food offering is the pulse ghee rice or paruppu pongal.

For the second quarter of the night , it is tulasi leaves for arachanai and rice payasams as neivaydium. For the last quarter of the night it is blue or red nelumbium flowers for arachanai and plain rice or ven pongal.If the flowers mentioned above is not available then vilva leaves can be used for all the four pujas. Same with the rice, ven pongal can be used for all 4 pujas.

Abhisheka materials like panchamirtham, ghee, oil, milk, curd, honey. sugar cane juice, coconut water, fruits and sandal paste are used. The last puja is done at dawn around 6.30am. After the pujas the devotees will be given only sacred ash prasadam of Lord Siva.

On Maha Sivarathiri the Saivite devotees are expected to stay awake in the temples witnessing the four quarterpujas for Lord Siva and uttering Sivanama.

It is a belief, that those who performor witness the four KALA pujas or this who witness will attain moksha that is they will have no more births and deaths. Those who are initiated in the Atmartha puja can perform the four KALA pujas at home to Lord Siva with vilva leaves.

## LEGANDS

There are legands regarding the Maha Sivarathiri. A tired hunter who was unable to get any beast on a day which happened to be Sivarathri day sat upon a vilva tree to pass the night, avoiding the predatory tigers of the jungle. To keep himself awake so that he might not fall down, he plucked the vilva leaves and dropped them down one by one. Accidently there was a Sivalinga under the tree. The hunter had no food that day because he was not able to hunt an animal and he had, also, no wink of sleep on the tree. Lord Siva . dwelling in the linga, accepted the leaves along with particles of water there on caused by the rains of the evenings as abisheak and floral offerings. On the hunter's death his soul was claimed by yama, the God of death. Lord Siva ordered his own ganas to bring this soul to the sivaloke on account of the merit due to him from his worship on the sivarathri day.This legend serve to indicate God's concern for man's MORAL EVOLUTION and his SURRENDER TO GOD.

# SRI RAMAKRISHANA


## (CONTINUATION FROM LAST KALASAM)

SRI RAMAKRISHNA NEVER POSED HIMSELF AS A TEACHER. HE ALWAYS FELT THAT HE WAS THE SERVANT OF SERVANTS. BUT HIS TEACHINGS HAD GREAT EFFECT ON PEOPLE SINCE HE PREACHED WHAT HE PRACTISED





SRI RAMAKRISHNA TAUGHT SPIRITUALITY THROUGH FUN AND FABLES. MANY WERE ATTRACTED BY HIS TEACHINGS. HE TAUGHT THEM ALL THAT THE ONE GOAL OF HUMAN LIFE IS TO SEE GOD.

HIS DISCIPLES WERE OF TWO KINDS-ONE WHO WERE MARRIED AND LED THE HOUSE HOLDERS LIFE AND THE OTHER YOUNG MEN. SOME OF WHOM WERE LATER TO BECOME MONKS. AMONG THE LATTER HE CHOSE AS LEADER NAREN WHO LATER BECAME SWAMI VIVEKANANDA.



TO THESE FUTURE MONKS, ONE DAY HE DISTRIBUTED THE OCHRE CLOTH. THE SYMBOL OF SANNYASA. HE KNEW THAT THEY ALL WOULD WORK TO SPREAD HIS MESSAGE UNDER THE LEADERSHIP OF SWAMI VIVEKANANDA.

ONE DAY WHEN RAMAKRISHNA KNEW THAT HIS END WAS APPROACHING. HE DECIDED TO PASS ON ALL HIS SPIRITUAL POWERS TO NAREN, SO THAT HE COULD BE THE TORCH BEARER OF HIS MESSAGE.



HE WENT INTO SPIRITUAL TRANCE. A BRIGHT LIGHT PASSED FROM HIS BODY AND ENTERED THE HEART OF NARENDRANATH. NARENDRA FELT A GREAT TIDE OF POWER FLOWING INTO HIM.

AFTER SOME TIME, SRI RAMAKRISHNA CAME BACK TO HIS SENSES. NAREN SAW TEARS ROLLING FROM HIS MASTER'S EYES.




NARENDRA WAS OVERWHELMED TO NOTE THE LOVE AND FAITH SRI RAMAKRISHNA HAD IN HIM.


# A GREEDY FOX

Once there was a hunter. He followed a boar to kill it. A Greedy fox watched this secretly.

It was like a race between the hunter and the boar. In the end the hunter shot the boar with his arrow. The wounded boar attacked the hunter and killed him with its tusk before it died. Now the dead bodies of both the hunter and the boar were lying side by side. the hunter's bow was lying near his body.

The fox came out of its hiding and said to itself. "Oh, I have got food without any effort. The boar will be my meals for about two months. Let me keep aside these dead bodies and eat the small dish first.

Then it started chewing the leather string of the bow . As soon as it bit the string it snapped and the curved bow was straightened. The sharp end of the bow pierced through its palate and entered it shell. The fox was dead on the spot.



# Moorthy Nayanar

To adore Lord Siva with sandalwood paste, smearing it all over the Sivalingam is regarded as a great form of His worship. This kind of worship was done by Moorthy Nayanar. He was born in Madura in Pandya kingdom. He was a Vaisya by caste. He was a great devotee of Lord Siva. Daily, he used to offer sandalwood paste to Lord Siva.

At that time, the city was invaded by a Karnataka king. In the battle Pandya king was defeated. The Karnataka ruler became the Pandya king. He was a follower of Jainism. He wanted to exterminate Saivaism and to spread his religion. He began to persecute Saivas. Moorthy Nayanar also had to bear a lot of sufferings. But he was undaunted. He continued his worship of the Lord, with sandalwood.

The King, with a view to convert Moorthy Nayanar forcibly to Jainism, made it impossible for anyone in Madura to obtain sandalwood. This greatly upset the Nayanar. He prayed to the Lord: ' Oh Ocean of mercy, this country is ruled by a tyrant and he is bent upon exterminating Your devotees. When will be we fortunate enough to get a king who will be devoted to You?' He knew that the people would follow the king, out of fear and in an effort to win his favour. He therefore, wanted a Saivite king.

He searched throughout the day for a little sandalwood to offer his worship. He could not get any. With a broken heart, he went to the temple: and he had a wonderful idea. He began to rub his own elbow ( in the place of sandalwood). The hand was bleeding profusely. Lord Siva was highly pleased with his devotion. A heavenly voice said: ' Oh noble soul, I am immensely pleased with your devotion. Kindly stop rubbing your elbow. All your grievances will be redressed. Kindly take up the reins of the kingdom. After ruling the country justly and wisely for a long time, you will come to My abode.' Nayanar was amazed to hear this and to see that his elbow regained its original shape.

Moorthy Nayanar did not aspire for kingship, but it was the Lord's will. That night the cruel king died. The next day, the ministers sent the palace elephant to choose their king, in accordance with the ancient custom. The elephant proceeded towards the temple. Moorthy Nayanar had come there for his worship. The elephant bowed to him, placed him on its back and returned to the palace.

The Ministers begged of Nayanar to become their king. Nayanar stipulated this condition: ' If I become king, I will not have any luxury bath, but only bathe with the sacred ashes. My jewel will be only Ruthradsham and my crown will only be matted locks. I shall strive to let the love of Lord Siva be enthroned in the hearts of all.' The ministers accepted these conditions with great joy and satisfaction.

Nayanar ruled the country justly and wisely for a long time, and eventually attained Siva's abode.

**Swami Sivanada**

# சொர்க்கமும் நரகமும்

ஓர் ஊரில் ராமய்யா, சோமய்யா என்று இரண்டு நண்பர்கள் இருந்தனர். ஒரு நாள் இருவரும் கோயில் வழியாகச் சென்று கொண்டிருந்தபோது அந்தக் கோயிலில் ஒரு பிரசங்கி ராமாயண காலட்சேபம் செய்து கொண்டிருந்தார். இதைப் பார்த்த ராமய்யா தன நண்பனிடம் நண்பா, இவ்விடத்தில் ராமாயண காலட்சேபம் நடக்கிறது. நாம் இருவரும் சேர்ந்து கேட்போம் என்று சோமய்யாவிடம் கூறினான். அதற்கு சோமய்யா இந்த ஆள் வளவளவென்று ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறார். இதில் என்ன இன்பம் இருக்கிறது. என்னுடன் வா நாம் இருவரும் ஒரு தாசி வீட்டுக்குப் போய் அங்கு சுகமாகக் காலம் கழிக்கலாம் என்றான்.

ஆனால் ராமய்யா சோமய்யாவின் பேச்சுக்கு செவி சாய்க்கவில்லை. சோமய்யாவும் அவனை விட்டு விட்டுத் தாசி வீட்டுக்குச் சென்று விட்டான்.

தாசி வீட்டுக்குப் போன சோமய்யாவுக்குச் சிறிது நேரத்திலேயே அந்த இடத்தின் மீது சலிப்பு ஏற்பட்டுவிட்டது. அவனுக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை. தன் நண்பனை நினைத்துக்கொண்டான். புண்ணியம் செய்தவன் அவன்! இப்பொழுது அவன் நிம்மதியாக ராமாயணப் பிரசங்கம் கேட்டுக்கொண்டி ருப் பான். நாமோ இங்கே பாவம் செய்து கொண்டிருக்கிறோம். என்று நினைத்துக் கொண்டி ருந்தான்.

அதே சமயத்தில் ராமாயண காலட்சேபம் கேட்டுக் கொண் டிருந்த ராமய்யாவோ தன் நண்பனையே நினைத் துக் கொண்டிருந்தான்.

பாவிப்பயல் அநியாயமாகக் கெட்டுப்போகின்றான். தாசி வீட்டில் பொழுதைக் கழிப்பதைவிட இங்கு வந்து பிரசங்கம் கேட்டால் எவ்வளவு புண்ணியமாயிருக்கும். என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

சில காலம் சென்றதும் இரண்டுபேரும் மரணம டைந்தார்கள். ராமாயண காலட்சேபம் கேட்கப் போனவனைக் கூட்டிச் செல்ல எம கிங்கரர்களும், தாசி வீட்டுக்குச் சென்றவனை அழைத்துப்போக விஷ்ணுவின் தூதர்களும் வந்தனர்.

ராமாயண காலட்சேபம் கேட்டவன் புனிதமான இடத்தில் இருந்தாலும் அவன் மனம் தாசி வீட்டில் இருந்த அவன் நண்பனைப் பற்றியே இருந்தது. அதைப்போல புனிதமற்ற இடத்தில் சோமய்யா இருந்தாலும் அவன் மனம் பூராவும் ராமாயண காலட்சேபம் கேட்டுக்கொண்டிருந்த ராமய்யாவையே நினைத்துக் கொண்டிரந்தது.

எனவேதான் ராமய்யாவுக்கு நரகமும் சோமய்யாவுக்கு சொர்க்கமும் கிடைத்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# What is the nature of Image worship?

We worship God Siva and the other Gods who by their infinite power pervade all over. They dwell in the image or Moorthy, which we worship as their temporary body. We commune with them through the ritual act of pooja.

The stones or metal images are not mere symbols of the Gods - they are the form through which their love, power and blessings flood forth into this world. A good comparison is talking through the telephone. We do not talk to the telephone instrument. We communicate with another person who may be thousands of miles away. Similarly without the sanctified Moorthy in the temple we cannot commune with the deity. God's vibrations and presence can be felt in the image. He uses the image as a temporary physical plane body or channel to communicate. We believe that God is actually present and conscious in it during pooja, that He is aware of our thoughts and feelings and even that He is sensing the poojas, gentle touch on the image. (metal or wood or stone)

Archchana is a form of pooja, in which the name, the birth star and the spiritual lineage of a devotee intoned to the God by the priest to invoke special, individual or family blessings and assistance. The pooja intones these, our credentials before the image (Deity) repeating the 108 names of the God, invokes God's blessings and offers to us the blessings of God, that He has received as Prasada.

இச் சிறுவர் பகுதிக்கான செலவின் ஒரு பகுதியினை இரு நிறுவனத்தினர் மனமுவந்து உதவி செய்துள்ளனர்.

**UMA CONVENIENT STORE**
**AND**
**VASAN PRINTERS**

# பெண்ணிற் பெருந்தக்கயாவுள?

## சாலினி

பெண்மை என்றால் என்ன? அடக்கம், தியாகம், பொறுமை, இரக்கம், அன்பு, அழகு, ஆற்றல், தொண்டு ஒப்புரவு முதலிய இயல்புகள் சேர்ந்த கலவையே பெண்மை எனப்படும். பெண்மையின் இந்த இயல்புகள் இன்பத்தை தரவல்லன. யாரும் இன்பத்தை இழிவுபடுத்துவதில்லை. இதனால் இன்பத்தை தரும் பெண்மை பெருமை அடைகின்றது.

அரும் பெரும் தத்துவ முத்துக்களை உலகிற்குத் தந்த வள்ளுவரே பெண்ணிற் பெருந்தக்கது யாவுள? என வியக்கின்றார். உலகில் பெண்ணை விடப் பெருமை பெற்றவை வேறு எவை இருக்கின்றன? எனத்தன்னையே கேள்வி கேட்டு வியந்தவர், கற்பே அதன் பெருமைக்குக் காரணம் என்றும் கூறுகின்றார்.

நீதி சாஸ்திரம் எழுதிய மனு - எங்கு பெண்களை வணங்குகின்றார்களோ அங்கு தேவதைகளின் ஆலயங்கள் தானாக உண்டாகின்றன என்றும் தந்தையாயினும் சரி கணவன் என்றாலும் சரி சகோதரன் என்றாலும் சரி பெண்களுக்குத் தகுந்த மரியாதை கொடுக்கவேண்டும் என்றும் நீதி கூறியவர். ஒரு குலம் உயர்வடையவும் மற்றோரால் அறியப்படவும் பெண்ணே காரணமாக விளங்கு கின்றாள் என்று வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார். மனு மட்டும் பெண்ணின் பெருமையைப்

போற்றவில்லை. இவற்றிற்கு ஒருபடி மேலே சென்று வேதகாலத்தில் வேதநூல் வல்லவர்கள் பலர் பெண்ணின் பெருமைக்கு தலைசாய்த்தி ருக்கின்றார்கள். வாசக்னவி கார்கி என்பவள் யாக்ஞவல்லரிடம் பிரம விடயம், இன்றைய பௌதிக விஞ்ஞானம், சக்திகளின் இரகசியம் (Energy) பற்றி தர்க்கம்செய்து தர்க்க அரசி எனப்பட்டம் பெற்றாள். கார்கியின் அண்ணன் மகளான மைத்திரேயி உலகத்திலேயே மிகவும் அத்தியாவசியமான சக்தி பெண்சக்தி என்றும் அது பெண்களிடமே உண்டு எனவும் நிரூபித்தாள். அவளின் ஆற்றலுக்கும் பெருமைக்கும் தலை வணங்கிய யாக்ஞவல்லர் அவளை திருமணம் செய்து மகிழ்ந்தார். வேத காலத்தில் பெண்ணின் முதன்மை இத்தனை சிறப்புடையதாக இருப்பதால் அதற்கு முன்பும் பெண் பெருமை மிக்கவளாகவே இருந்திருப்பாள்.

உலகின் சக்தி பெண் என்பதை மிக அழகு தமிழில்

**பெண் கொடியாக நடந்தது உலகே**

என திருமந்திரம் செய்கிறார் திருமூலர். உலகமே கொடிபோன்ற பெண்ணாலே இயங்கிச் செல்கின்றது என்பது அவர் கருத்து. ஆணுலகம், பெண்ணுலகம் என்ற பாகுபாடு இன்றி உலக இயக்கம் பெண்மையிலேயே தங்கி இருக்கின்றது. இதைவிட பெண்ணின் பெருமைக்கும் முதன்மைக்கும் சான்று வேண்டுமா?

உலக ஆக்கத்திற்குரிய தாய்மை பெண்ணிடமே உண்டு. அது அவளது தொண்டின் சிறப்பை எடுத்துக்காட்டும். பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும் தாய் எதனையும் பயன் கருதிச் செய்வதில்லை.

**ஈன்றாளின் என்ன கடவுளுமில்**

என்கின்றது நான்மணிக்கடிகை. தன் குழந்தை சான்றோனாய், கல்வியாளனாய், வல்லவனாய், நல்லவனாய், அன்பானவனாய் உலகில் வாழ வேண்டும் என நினைப்பவள் தாய். பெண்மையின் மலர்ச்சியே தாய்மையாகும். இதனாலே பெண் இல்லாள், இல்லத்தரசி எனப் போற்றப்பட்டாள். இல்லத்துடன் அவள் பெருமை நின்றுவிடவில்லை. தாய் மொழி, தாய் நாடு, தாய்க் கண்டம் என்று உலகளவில் பெண்ணின் பெருமை பரந்து விரிகின்றது.

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்.**

என்பது திருக்குறள். அவரவர் செய்யும் செயலே பெறுமைக்கும், சிறுமைக்கும் காரணம். தன்னலம்

கருதாமல் தொண்டாற்றுபவள் பெண். அதனால் வள்ளுவர் கூற்றுப்படி பெண்ணின் செயலே பெண்ணின் பெருமைக்குக் காரணமாக விளங்குகின்றது.

பெருமைக்குணம் எப்படி இருக்கவேண்டும் என்பதை 979வது திருக்குறள் கூறுகின்றது.

**பெருமை பெருமிதமின்மை சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல்**

எல்லாச் சிறப்புகள் இருந்தும் அதை இயல்பெனக் கொண்டு வாழ்வதே பெருமையாகும். மேலே நான் சொன்ன எல்லாச் சிறப்புகளும் பெண்ணிடம் இருந்தும் அவள் செருக்கடைந்து திரியவில்லை. இதுவே பெண்ணின் பெருமையாகும்.

ஞாலம் சொற்கேட்க வேண்டுமானால், உலகம் ஒருவனின் சொல்லைக் கேட்டு, அவன் பின்னே செல்ல வேண்டுமானால், அவனிடம் பெண்தன்மை இருக்கவேண்டும். அறிஞர்களை, மெய்ஞ்ஞானியர்களை, பாவலர்களைப் பார்த்தாலே இது புரியும். புத்தன், ஜேசு, ஆதிசங்கரர் போன்ற பெரியோர்களிடம் ஆண்மையைவிட பெண்மைக் குணங்களே ஓங்கி இருந்தன. அதனாலே உலகம் அவர்கள் சொற்கேட்டு அவர்கள் பின் சென்றது. இரக்கமும் கருணையும் எவனிடம் இருக்கிறதோ அவனிடம் பெண்மை முன்னிற்கும்.

இறைமையிலும் இயற்கையிலும் முதன்மைபெற்றுள்ள பெண்ணிற்கு பெருமையை எவரும் வழங்க வேண்டியதில்லை. அப் பெருமை இயல்பாகவே பெண்ணிடம் அமைந்திருக்கிறது.

பெண்ணின் பெருமை காக்கவே ஆண்மகன் பிறக்கின்றான். பெண்ணில்லையேல் அன்பேது? இன்பமேது? உயிரேது? உலகேது? உலகிற்கு மெய்ஞ்ஞானியரை விஞ்ஞானியரை தத்துவ ஞானியரை எல்லாம் உருவாக்கித் தருபவள் பெண். இதனாலே பெண் சக்தி எனப் போற்றப்பட்டாள்.

அவளது சக்தி இல்லாவிட்டால் உலக இயக்கம் ஏது? உலகில் உள்ள அனைத்துச் சக்தியினதும் பிறப்பிடம் பெண்ணே. பெண்ணின் பெருமை அறிந்தே, பெண்ணைச் சிறுமை செய்தோர் வாழ்ந்த காலத்தில் தோன்றிய பாரதி, பெண்மை வாழ்க என்றும் வெல்க என்றும் கூத்திடுவோமடா எனப் பாடி ஆனந்தக் கூத்தாடினார்.

உலகின் அதிஉன்னத சக்தியான கடவுளையே திருஞான சம்பந்தர் **பெண்ணார் திருமேனிப் பெருமான்** என்றும் **பெண்ணியலுருவினர்** எனவும் போற்றி வணங்குகின்றார்.

**உலகு என்பது உயர்ந்தோர் மாட்டே**

ஆதலால் உயர்ந்த அறிஞர்கள் உள்ள உலகு வாழும் வரை பெண்ணின் பெருமை பேசப்படும்.


GOSSIP

VEGETARIAN RESTAURANT
AND TAKE -AWAY

பொங்கல் வாழ்த்துக்கள்

*Newly opened Vegetarian Restaurant with sitting capacity of 300 people*

Parties, Receptions & Special Occasions catered for
Try our Special Dishes
eg: Gossip Pizza, Chinese Cuisine & Traditional Indian Thali

தரம் மிகுந்த சுவைமிக்க உணவுகளைத் தரும் தரமான உணவகம்

We are always recruiting staff

180-186 Upper Tooting Road
Tooting, London SW17 7EW
Tel: 0181-682 1111

# பெண்களும் வேதமும்

ஞானாச்சாரிய சுவாமிகள்
(அம்பத்தூர் வரதராஜபுரம் பதினெண் சித்தர் மடாதிபதி)

பெண்கள் பூசைக்கு வந்த மலர்கள் என்று இருக்கு வேதம் போற்றுகின்றது. வேதம் என்ற சொல் வேதித்தல், வேகவைத்தல், வேகவைத்துப் பக்குவப்படுத்தல், வேக வைத்துப் பக்குவப்படுத்தப் பயன்படுவது, வேகவைத்துப் பக்குவப்படுத்தப்பட்டது என்று பல்வேறு வகையான பொருள்களைப் பெற்றுத் திகழும் ஓர் தனிச்சொல் என்று இந்து வேதம் விளக்குகின்றது. பதினெண் சித்தர்கள் தங்களுடைய இந்து வேதக் கொள்கைகளையும் இந்து மத நடைமுறைகளையும் பெண்கள் மூலமாக முதலாக, உள்ளீடாக, உயிராக, சாதனமாக, விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாகக் கொண்டு தான் உருவாக்கி இருக்கி றார்கள்.

தந்தர பூசை, தாந்தரீக பூசை,தந்திற பூசை,தாந்தரபூசை, எந்தர பூசை,எந்திரபூசை, எந்திற பூசை, எந்தரீக பூசை, தவபூசை, சித்தபூசை, ஞானபூசை, என்னும் பூசைகளனைத்தையும் பெண்கள்தான் செய்யமுடியும் என்றும் ஆனால் ஆணின் துணையே இல்லாமல் கூட பெண்கள் செய்யலாம் என்றும் நமது இந்து வேதநூல்களும் இந்து மத நூல்களும் கூறுகின்றன.

ஆண்கள் பகல் முழுவதும் பொருள் ஈட்டும் பணியில் உழைத்துவிட்டு மாலையில் வீடு திரும்புகிறார்கள். பகல் முழுவதும் பெண்கள் வீட்டில் இருப்பதால் நீராடி விட்டு வீட்டில் அகல் விளக்கு– குத்துவிளக்கு ஏதாவது ஒன்றை ஏற்றி வைத்து வேதங்களை நிதானமான நெறியோடு ஓதமுடியும்.

**இந்து வேதத்தை அதிகம் நடைமுறைப் படுத்துபவர்கள் பெண்கள் தான்**

சாத்திர சம்பிரதாயங்களை பெண்கள்தான் நினைவில் வைத்து எல்லாத் திருநாட்களையும் திருவிழாக்க ளையும் சடங்குகளையும் முறையாக நிறையாகச் செய்யமுடியும். மேலும் பெண்கள் வயது முதிர்ந்த பெண்களிடம் சென்று எதை எதை எப்படி எப்படிக் கொண்டாடவேண்டும், பெண்கள் கருவுற்றால் மூன்றுமாதத்தில் என்ன செய்யவேண்டும்,
ஐந்து மாதத்தில் ஏழு, ஒன்பது மாதங் களில் என்ன செய்ய வேண்டும் என்றுஅறிந்து அதன்படி சடங்குகளும் சாப்பா டுகளும் தருகிறார்கள் . அதாவது பெண் வழியாகத்தான் நான்கு வேதநெறிகளும் செயலாக்கப்படுகின்றன. ஊருக்கு நான்கு, ஐந்து பெண்க ளாவது வேதம் ஓத, மந்திரிக்க பூசை செய்யத் தெரிந்த வர்களாக இருக் கவேண்டும். இருக்கிறா ர்கள்.
எனவே இந்து வேதத்தை அதிகம் நடைமுறைப்புடுத்துபவர்கள் பெண்கள்தான். குழந்தைகள் பிறந்ததுமுதல் குளிப்பாட்டுதல், நீராட்டுதல், மருந்து கொடுத்தல், தொட்டில் இடுதல், பெயர் வைத்தல், மொட்டை அடித்தல், காது குத்துதல், முதலிய அனைத்தையும் இருக்கு வேதத்தில் இருந்து செவி வழியே தெரிந்த பாட்டிமார்கள் ஒவ்வொரு ஊரிலும் இருக்கிறார்கள். இவர்கள் மிகத்தெளிவாக இன்னென்ன சடங்குகளுக்கு இன்னென்ன மந்திரங்களைச் சொல்லவேண்டும் என்பதைக் கூறும் வேத விற்பன்னர்களாக இருக்கின்றார்கள். மனித

வாழ்க்கையில் பள்ளியில் சேர்த்தல், பூப்பெய்தல், திருமணம் முதலிய அனைத்தும் ஆதி சிவனார் அருளிய இருக்கு வேதப்படிதான் இந்த நாட்டில் செய்து வரு கின்றார்கள். பெண்கள் மந்திரம் ஓத ஆண்கள் பூசை செய்யவேண்டும் என்று வேதம் சொல்கிறது. யாகத்தில் அமர்கிற வர்களுக்கு இருபக் கமும் பெண்கள் நின்று தேதத்தை ஓத அப்படியே ஆகட்டும்
(தாதஸ்து) என்று சொல்லி நெய்யை யாகத்தில் ஊற்று வார்கள். பெண்கள் அடுத்தடுத்து வேதங்களை ஓதுவார்கள்.

யாகத்தின் முன் பெண்கள் தான் காயத்திரி மந்திரங்களைச் சொல்லி படையல் பொருள்களை வைக்க வேண்டும். இனிய குரலில் பாடிக் கொண்டே அதுவும் வைக்கவேண்டும். இதன் மூலம் பெண்கள் வேதத்தை ஆதி காலத்திலேயே ஓதி இருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

**இருக்கு வேதகாலப் பெண்கள் இங்கே தோன்ற வேண்டும். வீடுகள் தோறும் ஆலயங்கள் தோறும் வேதம் ஓதப்படவேண்டும். அப்போது தான் வீடும் நாடும் மொழியும் உலகும் மனித நேய ஒருமைப்பாட்டுடன் ஓங்கும் –ஒளிரும்**

ஆதி சிவன் தவத்தில் இருக்கும்போது அவருடைய மனைவி காயத்திரி மந்திரங்களை ஓதுவார். அப்படியே மற்ற தேவர்களின் மனைவியர்களும் ஓதுவார்ளாம். பிள்ளையார் தவத்தில் அமரும்போது அவருடைய மனைவியர்களான சித்தி – புத்தி இருவரும் இருபக்கங்களிலும் நின்று கொண்டு காயத்திரி மந்திரங்களை ஓதுவார்கள். முனிவர்களும் இருடிகளும் காலை, மாலை, பகல் என்று எந்த நேரத்திலும் நீராடச் சென்று கழுத்தளவு முழங்காலளவு நீரில் நின்று கொண்டு பூசை செய்வார்கள். அவர்கள் என்ன பூசை செய்யப் போகிறார்களோ அந்த பூசைக்குரிய மந்திரங்களை வீட்டிலிருக்கின்ற பெண்கள் தர்ப்பைப் புல்பாய் விரித்து அதில் அமர்ந்து இனிய குரலில் பாடலாகவே மந்திரங்கள் அனைத்தையும் சொல்லி முடிப்பார்கள்.


இப்படி மந்திரம் சொல்லும்போது பூசைக்காக நீரத்துறைக்குச் சென்று ஆண்கள் வீடு திரும்பியவர்கள் வீட்டு வாயிலிலே வந்து நின்று கொண்டிருப்பார்கள். அப்போது பெண்கள் பூசையை முடித்துக்கொண்டு வாசலுக்கு அகல் விளக்கோடு வந்து மூன்று முறை ஆரத்தி எடுத்தபின்தான் ஆண்கள் வீட்டிற்குள் நுழைவார்கள். இதுவும் பெண்கள் வேதம் ஓதியிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு.

இன்றைக்கும் மிகப்பெரிய அருளாளர்கள் சித்தியாளர்கள் தங்களுடைய தாய், மனைவி, மகள் என்று பெண்க ளைத்தான் பூசையில் அமர வைத்து மந்திரங்களை ஓதச் சொல்லி மாந்திரப் பூசை தாந்திரபூசை, ஏந்திரபூசை, மூன்றையும் செய்கின்றார்கள். இதனால்தான் பெண்கள் பூசைக்கு வந்த மலர்கள் என்று வேதம் சொல்கின்றது. பெண்கள் இல்லாமல் எநத பூசையும் வெற்றிபெறாது. செய்யவும் கூடாது. பெண்கள் ஓதுகின்ற மந்திரங்களுக்குத் தான் அதிக சக்தி உண்டு.

இதுபற்றி யக்ஞவல்லி எழுதிய சித்தர் ராமாய ணத்திலும் தன்வந்தரி எழுதிய சித்தர்பா ரதத்திலும் அதிகமான குறிப்புக்கள் உள்ளன.

மீண்டும் சொல்கின்றேன். இருக்கு வேதகாலப் பெண்கள் இங்கே தோன்ற வேண்டும். வீடுகள் தோறும் ஆலயங்கள் தோறும் வேதம் ஓதப்படவேண்டும். அப்போது தான் வீடும் நாடும் மொழியும் உலகும் மனித நேய ஒருமைப்பாட்டுடன் ஓங்கும் –ஒளிரும் !

********



# கலசம் சஞ்சிகையூடு கருத்துப் பரிமாறல்

*அன்புடையீர்,*

கடந்த ஏழு நாட்கள் கிட்டத்தட்டப் பதினைந்து மணி நேரம் தவத்திரு யோகேஸ்வரானந்த சுவாமிகளின் பகவத்கீதை விளக்கத்தைக் கேட்கும் பாக்கியம் பெற்றேன். கர்மயோகம் ஐந்தாம் அத்தியாயத்திலிருந்து இருபத்தேழு சுலோகங்களை நேரடியாகச் சமஸ்கிருத மொழியில் வாசித்து ஆங்கிலத்தில் ஆன்மார்த்தச் சுவை சற்றேனும் குன்றாது சுவாமிகள் நாளாந்தம் கர்மயோகத்தேனை வார்த்துத் தந்தார். சுவாமிகள் யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் சீடன். இருபது வயதிலேயே ஞானமார்க்கத்தில் விழைவு கொண்டு ரிஷிகேசம் சென்று இருபது ஆண்டுகட்குமேல் நான் யார்? என்ற கேள்விக்கு விடை கண்டு தன் அனுபவத்தை எம் போன்றோருக்கு அள்ளி அள்ளித் தருகின்றார். அவர் சேவை வாழ்க.

இன்று இந்த அதிகாலை கடந்த மூன்று நாட்களில் சுவாமிகளின் கருத்துக்களைக் கேட்டதன் காரணமாகவும் எனது மேசையிலிருந்த மார்கழி மாதக் கலசத்தில் கண்ணோட்டம் விட்ட காரணத்தாலும் இதனை எழுத முனைந்தேன்.

கர்ம யோகத்தைப் பற்றிய விளக்க உரையின்போது சுவாமிகள் கூறினார்.

கர்மயோகத்தில் ஈடுபடுபவர் சுத்த மனமுடையவராய் தங்கள் உடம்பினை ஆள்பவராய் ஐம்புலன்களையும் வென்றோராய் சகல உயிரனைத்துக்கும் உயிராய் இருப்பதால் அவர்கள் கர்மம் செய்தபோதும் அதன் பலன்களால் பாதிக்கப்படார் ( கறைபடார்) கர்மத்தைப் பிரம்மத்திடம் ஒப்படைத்துவிட்டுப் பற்றின்றிச் செய்யப்படும் கர்மம் அதனை இயற்றுவோரைத் தண்ணீரிலுள்ள தாமரை இலைபோல் வைத்திருக்கும் அவர்களை அது தீண்டாது.

அறிவினால் ஒருவரது அறியாமை அழிக்கப்படும்போது அவரிடம் மேலறிவானது சூரிய ஒளிபோல வெளிச்சம் கொடுக்கும்.

தாழ்மையும் அறிவும் ஒருங்கே இணைந்த இறை நிலையில் பசு, யானை, நாய் இவற்றோடு சண்டாளரையும் ஒரே விதமாய்ப் பார்ப்பர் ஞானிகள்.

பிரம்மத்தை அறிந்தோரது அறிவு நிலை உறுதியானது.

தவறான நம்பிக்கைகளினால் திருப்தி அடையாது, நன்மைகள் வரும்போது மட்டற்ற மகிழ்ச்சியும் நன்மையில்லாதன நிகழும்போது கலக்கமும் அடையாது அது பிரம்மத்திலேயே நிலைத்து நிற்கும்.

வெளிப் பொருள்களினின்று தன்னை விடுவித்த மனமானது தன்னுள்ளேயே ஆனந்தத்தைப் பெறும். பிரம்மத்தினுள் தன்னைக் கண்டு கொள்ளும் மனது என்றும் அழியாப் பேரின்பத்தை அடையும்.

நாம் கர்மங்களைச் செய்யும்போது எதனைச் செய்கிறோமென்பதிலும் பார்க்க என்ன விதமான மனப் பாங்கோடு செய்கிறோமென்பதே முக்கியம்.

எந்த ஒரு கருமத்தைச் செய்யும்போதும் எமக்குள் இருக்கும் கடவுட் தன்மையை உணர்ந்து அதனை மையமாக வைத்தே செயற்படவேண்டும். அப்போ நாம் செய்யும் காரியங்களெல்லாம் ஆன்மீக அப்பியாசங்களாக மாறும்.

எக் காரியத்தையும் மனதை ஒரு நிலைப்படுத்தி சமநிலையில் வைத்து அமைதியுடனும் சாந்தத்துடனும் செய்யப் பழக வேண்டும்.

புத்தர் பிரான் கூறிய மத்திய பாதை என்பதுவும் இதுவே.

இவ்வாறு கருமங்களைச் செய்வதன்மூலம் நாம் எங்கள் உள்ளார்ந்த சுயம் என்ன என்பதை அறிவோம். நாம் யாரெனக் கண்டு கொள்வோம். தன்னை அறிந்தின்ப முறுவோம். கடவுள் எம்முன்னே உள்ளார். இறையை மையமாக வைத்தே எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மையை எமதாக்கிக் கொள்வோம்.

மேற்படி அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டே இருக்க என்முன் மணிவாசகர் தோன்றினார். சிவபுராணம் என்முன் விரிந்தது. சிவபுராணத்தில் மணிவாசகர் கர்மயோகத்தின் தத்துவார்த்தத்தை என்ன அழகாகத் தனது சிவானுபவத்தைக் கொண்டு விளக்கியிருக்கிறார் என உணர்ந்தேன். நான் உணர்ந்தவற்றைப் பின்னொரு கட்டுரையில் எழுத இருக்கிறேன்.

தவத்திரு யோகேஸ்வரானந்த சுவாமிகளின் பணி நீடிக்க இறையை வேண்டி இதனை முடிக்கின்றேன்.

---

**வரதா சண்முகநாதன்**

# பெண்கள் பஞ்சபுராணம் பாடலாமா?

*கலசம் ஆசிரியர் அவர்கட்கு,*

நான் 7-12-97 ஞாயிற்றுக்கிழமை ஈஸ்ட்காம் ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே நடைபெற்ற பூசையில் பஞ்ச புராணம் பாடுவதற்கு, ஆண்கள் யாரேனும் இருக்கிறார்களா என கோயில் குருக்கள் ஒரு அம்மையாரைக் கேட்டார். அதற்கு அருகே நின்ற பெண்ணைக் காட்டி இவ பாடுவா எனச் சொல்ல உடனே குருக்கள் வேண்டாம் சுவாமியே பாடட்டும் என்றார்.

பெண்கள் பஞ்ச புராணம் பாடக் கூடாது என்று எந்த சைவ சமய நூல் கூறுகின்றது? இதற்கான விரிவான விளக்கத்தை சம்பந்தப்பட்ட குருக்கள் தருவாரா? இதனை வாசிக்கும் பெண்கள் சொல்ல விரும்பும் கருத்துக்களையும் கலசம் மகளிர் பகுதி மூலம் அறிய விரும்புகின்றேன்.

சிவா (இதற்கான விளக்கத்தை குருக்களுக்கு அறியத் தருவோம்)

# படித்தேன்! ரசித்தேன்! புனிதமானேன்!

அன்பு வாசகர்களே! இந்தப்பகுதி இப் பொங்கல் இதழுடன் உங்களுக்காக ஆரம்பிக்கப்படுகின்றது. சில சமயங்களில் நாம் எதையாவது வாசிக்கும்போது மனதில் ஒருவகை நெருடல் அல்லது ஒருவகை எழுச்சி எழுவது இயற்கை. இப்படியான சந்தர்ப்பம் கலசம் வாசகர்களான உங்களில் ஒருவருக்கு ஏற்பட்டால் அதனை ஏன் கலசத்தின் ஏனைய வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது? இதற்காக உங்களுக்கு நாம் உருவாக்கித்தரும் களம் இது. ஆரம்பமாக இம்முறை காந்திமகானின் சத்தியசோதனையைப் படித்ததால் தான் பல மாற்றங்களை மனதில் கொண்டதாகக் கூறும் அன்ப ரினால் அனுப்பிவைக்கப்பட்ட அப்பகு தியைப் பிரசுரிக்கின்றோம்

## சைவ உணவு ஒரு ஆய்வு

சைவ உணவை ஆதரித்து எழுதிய நூலாசிரியர்கள் மிகவும் நுட்பமாக அவ் விசயத்தை ஆராய்ச்சி செய்திருந்ததைக் கண்டேன்.

மேல் வர்க்கத்தைச் சேர்ந்த ஜீவர்கள், கீழ் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை ஆதரித்துக் காப்பாற்றவேண்டும். மனிதர் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்வதுபோல், மனிதர்களும் மிருகங்களும் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளவேண்டும். மற்றும் மனிதன் சுகானுப வத்திற்காக உணவு உட்கொள்வது முறையல்ல, உயிர் வாழ்வதற்காகவே உணவு உட்கொள்ள வேண்டும் என ஸ்தாபித்திருந்தது.

இவ்விதம் சைவ உணவு சங்கத்து பிரதான புருஷர்களுடன் கலந்து நானும் தீவிர ஆய்வு நடத்தி வந்தேன்.

இத்தகைய சோதனைகளின் பயனாக சுவை என்பது நாவில் இல்லை, மனதிலேயே இருக்கிறது என உணர்ந்தேன்.

ஒரு முறை மாவுப் பண்டங்களை நீக்கியி ருந்தேன். இன்னொரு சமயம் ரொட்டி பழம் இரண்டை மட்டுமே சாப்பிட்டேன். மற்றுமொரு சமயம் முட்டை, பால், பால்கட்டி இவைகளையே தின்றேன்.

மாவுப் பண்டங்களை நீக்கச் சொன்னவர் முட்டைகளை சிலாகித்து எழுதியிருந்தார். முட்டைகளை மாமிசத்துடன் ஒப்பிடக்கூடாது என்பது அவரது மதம்.

முட்டை தின்பதில் உயிருள்ள பிராணி எதற்கும் தீங்கு செய்யப்படவில்லையென்பது தெரிந்தது.

பிரதிக்ஞை செய்திருப்பது என் அன்னையிடம். இதில் என் அன்னை கொண்டிருந்த கொள்கையே சிறந்தது. என் அன்னை முட்டையையும் புலாலுடன் ஒப்பிட்டுக் கொண்டிருப்பவர். பிரதிக்ஞையின் உண்மைக் கருத்தை அறிந்ததும் முட்டையையும் அது சம்பந்தமான ஆய்வையும் அடியோடு நீக்கிக் கொண்டேன்.

இங்கிலாந்தில் புலால் என்பதற்கு மூவகை வியாக்கியானம் கூறப்பட்டது.

ஒரு சாரார், பறவைகள், மிருகங்கள், இவற்றின் இறைச்சியே என்றனர். இவற்றை நீக்கி மீனும் முட்டையும் உட்கொண்டனர்.

மற்றொரு சாரார் எல்லா உயிரினங்களின் இறைச்சியும் புலாலே என்றனர். ஆனால் முட்டைகளை மட்டும் உண்டனர். மூன்றாவது சாரார் உயிர்ப் பிராணிகள் எல்லாவற்றின் தசைகளும், அவைகளால் தரப்படும்

பொருட்களும் உதவாது என்றனர். இவர்கள் முட்டை பால் இவையும் புலாலே என்றனர்.

உலகெங்கும் பிரதிக்ஞை என்பதற்கு பல பொருள் சொல்கிறார்கள். பிரதிக்ஞை எவ்வளவு தெளிவாக இருந்தபோதிலும் ஜனங்கள் தங்களுக்கு அனுகூலமாக அதைத் திரித்துப் பொருள் கூறுகிறார்கள்.

ஜன சமூகத்தில் எல்லா வகுப்பினரும் அரசன் முதல் ஏழைக் குடியானவன் வரை இப்படிக் காணலாம். சுய நலத்தினால் அவர்கள் குருடராகித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறதல்லாமல் உலகத்தையும் கடவுளையும் ஏமாற்ற முயல்கிறார்கள். சத்தியத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அதற்கு வியாக்கியானம் கேட்க அடுத்தவரை நாடமாட்டார்கள். இச் சோதனைகள் யாவும் இங்கிலாந்திலேயே விதைக்கப்பட்டதாகும்.

மதம்விட்டு மதம் புகுந்தவன் அம் மதத்தின்மீது தீராத பற்றுக் கொள்வதுபோல சைவ உணவு ஆராய்ச்சி இங்கிலாந்தில் அவர்க்ளைக் கடினமாக்கி விட்டிருந்தது எனலாம்.

**PRASAD SWEETS**

**புதிதாகத் தயாரிக்கப்பட்ட காரமான - இனிப்பான தின் பண்டங்கள்**
99p/1b **இலிருந்து கிடைக்கும்**

சகல நிகழ்ச்சிகளுக்கும் எம்மை நீங்கள் அணுகலாம்
£1.60p per plate

**Always Fresh & Best**

**168 Upper Tooting Road**
**London SW17**
**Tel: 0181 682 3363**

**222 Ealing Road**
**Wembly, Middlesex**
**Tel: 0181 902 1704**


VARSHI'S SUPER STORE

**VARSHI'S SUPER STORE**

லண்டனில் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கான இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் ஓடியோ, வீடியோ, சீடீக்களைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
**தேசிய லாட்டரிச் சீட்டுகளும் விற்பனையாகின்றன.**

**FIRST AND THE BEST TAMIL SHOP IN NEW MALDEN**

**99, BURLINGTON ROAD, NEW MALDEN,**
**SURREY KT3 4LR**
**TEL : 0181 336 0061**




# Satyan Jewellers

வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் மனமார்ந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

**Specialists in 22ct. Gold Jewellery & Diamond**


தரமான நகை தேடி வாருங்கள்
நகையோடு நகை தருவோம் வாருங்கள்
கரமெல்லாம் காப்பதனை அணியுங்கள்
கண்ணாளன் மனங்குளிர வாழுங்கள்
விரலெல்லாம் மோதிரத்தைப் போட்டிடலாம்
வீச்சாக நீர் நடந்து வாருங்கள்
பாரதினில் சிறந்த நகை மாளிகை
சத்தியனின் இடம்வந்து சேருங்கள்

**220 GREEN STREET**
**FOREST GATE, LONDON E7 8LF**
**TEL: 0181 471 0564, TEL: 0181 470 7056**
**TEL: 0181 503 5379**

# மெய்ஞ்ஞான ஒளியைத்தேடி

- சுவாமி யோகேஸ்வரானந்தா -

இக்கட்டுரையின் நோக்கம் ஞான ஒளியை அடையும் மார்க்கத்தை விளக்குவதாகும். உலகிலுள்ள அனைவரும் இந்த மார்க்கத்தையே தேடிச் செல்கிறார்கள். அதாவது வாழ்வின் உண்மைத் தத்துவத்தைக் கண்டு இறைவனை அடை யும் வழியாது என் பதே அனைவரது கேள்வியுமாகும். ஒவ்வொரு சமயமும் இதற்கான மார்க்கத்தைக் காட்டுவ தாகவே கூறிப்போதிக்கின்றன. உல கிலே ஆண்டவனைத் தரிசிக்க விரும்பும் அனைவரும் ஞான ஒளியை அடைவதையே நோக்கமாக கொண்டுள்ளவராக இருப்பதால் முதலில் இந்த ஞான ஒளி என்பது என்ன என்பதையும் அதன் அர்த்தம் என்ன என்பதையும் ஆராய்வோம்.



ஞான ஒளி பெறுவது என்றால் என்ன என்பது பற்றிப் பல வாக்கியங்கள் பாவிக்கப்படுகிறது. தெய்வீக உணர்வு, மோக்ஷம் அவற்றுள் இரண்டு. ஆனால் அது என்ன? அதன் தன்மை யாது? என்பது பற்றி எங்கள் மனதில் தெளிவான அறிவு இருந்தால் தான் அதைப் போற்றவும் அதை நோக்கிச் செல்லவும் முடியும். ஞான ஒளி எமக்கு வரும்போது வாழ்வின் உண்மையான தன்மை யாது? என்பது விளங்கும். அனைத்து மதங்களும் கடவுள் ஒருவரையே சாஸ்வதம் என்று கூறுகின்றன. எனவே தெய்வீக உணர்வு அல்லது தெய்வீக நிலை என்பதன் விளக்கம் என்ன?

இந்து வேதங்களில், குறிப்பாக உபநிடதங்களில் தெய்வீக நிலை என்பது மிகவும் தெளிவாகவும் அழகாகவும் பிரம்மம் என்ற வார்த்தையால் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இது நாம் கடவுளாக வணங்கும் பிரம்மாவைக் குறிப்பதாகாது. பிரம்மம் என்பது சர்வவியாபியாகிய பரப் பிரம்மத்தையே குறிப்பதாகும். பிரம்மம் என்ற சொல்லே அதன் இயல்பை எடுத்துரைப்பதாகிறது. இச் சொல் சமஸ்கிருத மூலமாகிய பிரக என்பதிலிருந்து பிறந்ததாகும். பிரக என்றால் பரந்த, முடிவற்ற, எல்லையில்லாத ஒன்று என அர்த்தமாகும். இதனாலேயே ஆண்டவன் சர்வவியாபி, எங்கும் நிறைந்திருக்கிறான் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு கூறும்போது கடவுள் அதன் கடவுள் தன்மையில் எங்கும் வியாபித்திருக்கின்றான் என அர்த்தமாகின்றது. ஆண்டவன் தனது இயல்பில் அல்லது சுபாவத்தில் ஏற்றத் தாழ்வின்றி ஒரு இடமும் பாக்கியின்றி பரந்து நீக்கமற நிறைந்து காணப்படுகின்றான். ஒவ்வொரு அணுவிலும் எல்லா விந்துக்களிலும் மனிதனுட்பட இந்த பிரபஞ்சத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளிலும் , தேவர்கள் , தேவதைகளிலும் ஆண்டவன் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றான். அனைத்திலும் நிறைந்து காணப்படும் ஆண்டவன் எங்கள் அனைவரிலும் நிறந்திருக்கிறான் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். இவ்வாறு எங்களில் நிறைந்திருக்கும் ஆண்டவனை அறியும் தெய்வீக நிலையை அடைவதுதான் அனைவரது குறிக்கோளும் ஆகும்.

இந்தக் கடவுள் உணர்வு எனும் தெய்விக நிலை எங்களுக்குள் தான் உள்ளது. எங்கள் இதயத்திலே ஒளிவீசி அமர்ந்திருக்கிறது. இதை உணர்ந்து தரிசிக்கும்போது தான் வாழ்வு பூரணத்துவம் அடைந்துவிட்டதென்ற அற்புத அனுபவம் கிட்டுகின்றது. மானிடப்பிறப்பு என்பது முழுமையடையாத ஒன்று என்று எண்ணும் மனிதன் எதை நாடுகின்றான்? தன்னில் உள்ள குறையை நிறைவு செய்து, பூரணத்துவம் பெறுவதற்கே மனிதன் இதய பூர்வமாக விரும்பி அந்த மார்க்கத்தைத் தேடி அலைகின்றான். தன்னிலுள்ள குறைகள் முரண்பாடுகள் மனவிகாரங்கள் யாவற்றிலிருந்தும் விடுபட்டு நிறைவு காணவே மனிதன் அவாவுகின்றான். இதை அவன் அடைந்ததும் அமைதி உண்டாகின்றது. இந்தப் பரிபூரண நிலையை எய்தும் வரையில் தான்

அவனுக்கு ஓட்டமும் அலைச்சலும். அவை அடங்கி அமைதி கிட்டுவதே தெய்வீக அனுபவமாகும். இந்த நிலை அவனுக்குக் கைகூடி வரும்வரை மனிதன் மனதில் நிம்மதியில்லாமல்அதைத் தேடி அலைந்து திரிகின்றான். மனிதனுக்கு ஏன் இந்த அமைதியின்மை? ஏனிந்த அலைச்சல்? அவனில் உள்ள குறைபாடுகளே அவனுடைய நிம்மதியைப் பறித்து இப்படி விரட்டுகின்றது. இந்தக் குறைகளையெல்லாம் களைந்தெறிந்து பரிபூரண நிலையை எய்தும்வரை அவனுக்குத் தன்னுடனான போராட்டம் ஓயப் போவதில்லை.

தன் குறைபாடுகளை அகற்றி நிறைவு பெற்ற மனிதன் தெய்வநிலை எய்துகின்றபோது அது சிவபதம் எனப்படும் இன்பமயமான ஓர் அபூர்வ அநுபவத்திற்கு மனிதனை இட்டுச் செல்கிறது. மனிதன் இந்த உன்னத நிலையை அடைவதற்கான மார்க்கத்தை எடுத்துரைப்பதே சமயம். எனினும் சமயம் மனிதனுக்குப் போதிக்கப்படவேண்டிய விதத்தில் போதிக்கப்படாமல் தவறாக வழி நடத்திச் செல்ல முற்பட்டதாலேயே அறியாமையும் குழப்பநிலையும் உருவாகியது. துரதிஸ்டவசமாக உலகில் பல்வேறு சம்பிரதாயங்களும் கிரியைகளும்சமயத்தின் பெயரால் பரப்பப்படுகிறது. இந்தத் தவறைத் திருத்துவதற்கு முன் தவறை நாம் சரியாக அடையாளம் காண்பது அவசியம். அது எங்கே ஏற்பட்டிருக்கிறது எனபதையறிவது மிக முக்கியம். அது எம்மில்தான் உறைந்திருக்கிறது. பிரச்சினைகளை நாம் தான் எம்மைச் சுற்றி வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். இதையறியாமல் நிம்மதி எங்கோ இருப்பதாக எண்ணி நாம் அலைவதால் தான் இத்தனை துன்பங்களும் ஏற்படுகின்றது. எம்மைச் சுற்றியுள்ள அறியாமையை அகற்றி குறைபாடுகளை நிவிர்த்தி செய்து பூரணமாகும்போதுதான் எம்முள்ளே வீற்றிருக்கும் ஆண்டவனை அடையாளம் காணும் மோட்ச நிலை கைகூடும். இந்த நிலையை அடையும் முதற்படியாக சகல சீவராசிகளிலும் நிறைந்திருக்கும் இறைவன் என்னிலும் நிறைந்திருக்கின்றான். சர்வவியாபியாகிய பராமாத்மா என் மனதில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நேருக்குநேர் சந்திப்பதே உண்மையான சமயத்தின் ஆரம்பம். பரமாத்மா தான் என்பதை விளங்கிக்கொள்ளாத மனிதன் உண்மையான சமயத்தின் முதற்படியைத் தவறவிட்டவனாகிறான்.

வேதங்களும் உபநிடதங்களும் கூறும் இந்த முழுமுதல் உண்மையைச் சாதாரண மனிதனால் புரிந்து கொள்ளமுடியாது என்பதை உணர்ந்த ரிஷிகளும் முனிவர்களும் வேதங் கூறும் உண்மைகளைக் கதைவடிவில் உருவம் கொடுத்து அங்கே இந்தத் தத்துவங்களைப் புகுத்தி புராண இதிகாசமாகத் தந்தார்கள். இந்த நோக்கத்தைக் கூடச் சரிவரப் புரிய முடியாத நாங்கள் கதைகளை மட்டும் ஜீரணித்துக்கொண்டு அவை தரும் உண்மைகளை ஒதுக்கிவிட்டோம். இதுவே சைவ சமயம் ஒரு சம்பிரதாயங்கள் மூட நம்பிக்கைகள் நிறைந்த சமயம் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தது. சரியாக ஜீரணம் செய்யப்படாத உணவு உடலுக்குச் சங்கடத்தையும் உபாதையையும் தருவது போல் சரியாக ஜீரணிக்கப்படாத சமய அறிவு மனிதனின் உள்ளத்தில் அமைதியின்மையையும் அறியாமையையும் வளர்த்தது. முடிவு? ஆரோக்கியம் குன்றிய பிரயோசனமற்ற ஒன்றாகச் சமயம் மாறத்தொடங்கியது.

(இன்னும் வரும்...)


EDGWARE PHYSIOTHERAPY CLINIC




Specialised in
Sports injuries
Run by
an experienced
Chartered
Physiotherapist

**KANESH NATHAN**
*Ph.d, M.C.S.P S.R.P*

**10 The Drive**
**Edgware**
**Middlesex HA8 8PT**

**TEL : 0181 958 9820**
**FAX: 0181 958 1244**

கிழக்கு இலண்டன் நியூகாம் பகுதியில்
Dental Surgery சம்பந்தமான
சகல பிரச்சினைகளுக்கும் அணுகவேண்டியவர்



டாக்டர்
டேவிட் ஏ. பழனிவேல்

* Restorative Dentistry
* Prosthetics
* Orthodontics
* Endodontics &
* Surgical Dentistry

127 Greengate, London E13 0BG
Tel: 0181 472 9429


VASAN & COMPANY
Auditors & Accountants

Specialists in

* Accounts Preparation
* Book Keeping Services
* VAT, PAYE, Self Assessment
* Tax Planning * Tax Investigation

78 BECKENHAM ROAD, BECKENHAM, KENT BR3 4RH
TEL: 0181 658 8867 FAX: 0181 658 8177

# பட்டமளித்துக் கௌரவித்தோம்



சேவை செய்யும் மனிதர்கள் அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்படுதல் வேண்டும். மானிடசேவை உலகில் சிறந்த சேவையாகும். கடவுளுக்கு மிக அருகில் செல்லும் தகுதி படைத்தவர்களும் இச் சேவையாளர்களே. கலசம் சஞ்சிகை இன்றைய உலக நெருக்கங்களில் நெரிபட்டு மரணிக்காமல் தலை நிமிர்ந்து இருபது மலர்களை வெளியிட்டு மிகவும் கெம்பீரமாக வெற்றி நடைபோட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் – ஒரு மாலைப்பொழுதில் மதிப்புக்குரிய திருவாளர் பாலசுப்பிரமணியம்(மணி மாஸ்டர்) அவர்களை கௌரவித்துப் பட்டமளிக்கும் உயரிய முடிவை எடுத்துக் கொண்டது.

தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரிய சேவை புரிந்து வரும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் தொடர்ந்து 30 ஆண்டுகள் அச் சங்கத்தின் செயலாளராகவும் சேவை புரிந்து வரும் அவருக்கு சைவப் புரவலர் என்னும் பட்டத்தை வழங்கி கலசம் தனக்குப் பெருமை தேடிக்கொண்டது.

மணி மாஸ்டர் அவர்கள் நீடூழி வாழட்டும்!

# குறித்து வைக்கவேண்டிய தினங்கள்

| | |
|---|---|
| 14.1.98 | தைப் பொங்கல், தை மாதப் பிறப்பு |
| 24.1.98 | ஏகாதசி விரதம் |
| 25.1.98 | பிரதோஷ விரதம் |
| 27.1.98 | அமாவாசை விரதம் |
| 31.1.98 | சதுர்த்தி விரதம் |
| 2.2.98 | ஷஷ்டி விரதம் |
| 4.2.98 | கார்த்திகை விரதம் |
| 8.2.98 | பிரதோஷ விரதம் |
| 10.2.98 | தைப் பூசம் |
| 11.02.98 | பூரணை விரதம் |
| 13.02.98 | மாசி மாதப் பிறப்பு |
| 24.02.98 | பிரதோஷ விரதம் |
| 25.02.98 | மகாசிவராத்திரி விரதம் |
| 26.02.98 | அமாவாசை விரதம் |
| 02.03.98 | சதுர்த்தி விரதம் |
| 03.03.98 | ஷஷ்டி விரதம் |
| 04.03.98 | கார்த்திகை விரதம் |
| 08.03.98 | ஏகாதசி விரதம் |
| 10.03.98 | பிரதோஷ விரதம் |
| 11.03.98 | மாசி மகம், நடேசர் அபிஷேகம் |
| 12.03.98 | பூரணை விரதம் |
| 15.03.98 | பங்குனி மாதப்பிறப்பு |
| 16.03.98 | பங்குனித் திங்கள் 1 |
| 23.03.98 | பங்குனித்திங்கள் 2 |
| 24.03.98 | ஏகாதசி விரதம் |
| 25.03.98 | பிரதோஷ விரதம் |
| 27.03.98 | அமாவாசை விரதம் |
| 30.03.98 | பங்குனித் திங்கள் 3 |
| 31.03.98 | கார்த்திகை விரதம் |
| 02.04.98 | ஷஷ்டி விரதம் |
| 05.04.98 | ஸ்ரீராம நவமி |
| 06.04.98 | பங்குனித் திங்கள் 4 |
| 07.04.98 | ஏகாதசி விரதம் |
| 09.04.98 | பிரதோஷ விதைம் |
| 10.04.98 | பங்குனி உத்தரம் |
| 11.04.98 | பூரணை விரதம் |
| 13.04.98 | பங்குனித் திங்கள் 5 |
| 14.04.98 | வெகுதானிய வருடப் பிறப்பு |

தொகுப்பு : அமுதா

# இருபது ஆண்டுகளில்...

1997ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் சைவ முன்னேற்றச் சங்கம் தனது இருபது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. நியூஹாம் நகர மண்டபத்தில் நாதசுர இன்னிசையுடனும் சிவஸ்ரீ நாகநாதசிவம் சிவாசாரியார் அவர்களது தீபாராதனை வழிபாட்டுடனும் விழா ஆரம்பமானது. இருபது ஆண்டு நிறைவை இருபது குத்துவிளக்குகள் ஏற்றி நினைவில் இருத்தி நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இந்நாட்டில் நமது சமுதாயத்துக்கு நல்லது செய்பவர்கள் என்ற வரிசையில் இருபது பெரியார்கள் கௌரவிக்கப்பட்டார்கள். சங்கத்தின் தமிழ்ப் பணியாக நடத்தப்படும் நால்வர் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் நடனம், இசை என்றுவரிசையாக விருந்து வைத்தார்கள். அவர்களின் ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார்கள். நமது வருங்கால சந்ததி இந்நாட்டில் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளை அலசி ஆராய்வதுபோல வருங்கால முத்துக்கள் என்ற நாடகம் அமைந்திருந்தது. சைவ முன்னேற்றச் சங்கம்போல அமைப்புகள் இல்லாவிட்டால் நமது இளைய தலைமுறை குறிக்கோளின்றி தடம்புரண்டு போகலாம் என்பதை சுட்டிக்காட்டுவதுபோல நாடகம் இருந்தது. கலை, இசை நிகழ்ச்சிகளில் மாணவர்களின் திறமையும் ஆசிரியர்களின் ஊக்கமும் ஒருசேர வெளிப்பட்டன என்றால் மிகையாகாது.

கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக அமைந்த விழா நிறைவாகும்போது நமது வயிற்றுக்கும் விருந்து வைத்து நிரப்பிய அமைப்பாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். விழாவின் சிறப்பு வந்தோர் எண்ணிக்கையிலும் பங்குபற்றியவர்களின் ஆர்வத்திலும் வெற்றிவிழா என்று எண்ணும்படி இருந்தது.

1977ஆம் ஆண்டில் இந்நாட்டில் ஒரு கோயில் இல்லை. தேம்ஸ் நதியின் வடக்கிலும் தெற்கிலும் அப்போது கோயில்கள் உருவாக திட்டங்கள் துரிதமாகத் தயாராகிக்கொண்டிருந்தன. எனினும் இலண்டனுக்கு மிகத் தூரத்தில் உள்ளவர்களுக்கு சமய வழிபாடு செய்யும் வாய்ப்புகள் அதிகம் இருக்கவில்லை. அந்தச் சூழ்நிலையிலே உருவானது தான் சைவ முன்னேற்றச் சங்கம். இந்த இருபது ஆண்டுகளில் சங்கம் சமயப் பாடசாலை யையும் சமூகசேவைகளையும் நல்ல முறையில் நடத்தி வருகிறது. கடந்த நான்கு வருடங்களாக சமய சஞ்சிகையையும் வெளியிடுகின்றது. இந் நாட்டிலுள்ள இசைக் கலைஞர்களையும் சங்கம் நிகழ்ச்சிகளிற் பங்குகொள்ள வைத்துக் கௌரவித் துள்ளது. அது தவிர சுவாமி சச்சிதானந்தா, புலவர் கீரன், திருமதி வசந்தா வைத்தியநாதன், பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி, பித்துக்குளி முருகதாஸ் ஆகிய சைவப் பெரியார்களையும் தனது நிகழ்ச்சிகளிற் பங்குகொள்ள வைத்து பெருமைதேடிக்கொண்டுள்ளது. இத்தனை செய்த சங்கம் தனது இருபதாண்டு நிறைவைக் கொண்டாடுவது சாலப் பொருத்தமானதே.

–ஹிந்தோளம்–

**********


## கலசம் சந்தாப் படிவம்

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். இத்துடன் அதற்கான...............................(பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

Name:..................................................

Address...............................................

.............................................

.............................................

UK & EUROPE £10 Only for Two years

Others- £14.00 Only for Two Years

Please make cheque/postal orders payable to SMS(UK)

No Stamp Needed
KALASAM
FREE POST
3, The Orchard
Wickford
Essex, SS12 9BR

# கட்டுரைப்போட்டி

## கலசத்தின் 25ஆவது மலர்

வெளியீட்டையொட்டி கலச வாசகர்கள் மத்தியில் இப்போட்டியினை நடாத்த உள்ளோம்.
இப்போட்டி மூன்று பிரிவாக நடைபெறவுள்ளது.

### பிரிவு 1
### ( 12 வயதிற்குட்பட்டவர்கள்)

தலைப்புகள்:

எனது சமயம் **(My Religion)**

நான் விரும்பும் கடவுள்

**(The God I like)**

நான் பார்த்த கோயில் திருவிழா

**(About a temple festival I saw)**

**தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுதலாம். கட்டுரைகள் கலசத்தின் ஒரு பக்கத்துக்குக்குறையாமல் இருக்கவேண்டும்.**

**பரிசு : தங்கப்பதக்கம்**

### பிரிவு 2
### ( 12 - 21 வயதுதுக்குட்பட்டவர்கள்)

தலைப்புகள்:

**சமயம் எங்களுக்குத் தேவையா?**

**(Why do we need religion?)**

இந்து சமயம்

**(Hinduism)**

**கோயில்கள் எங்களுக்குத் தேவையா?**

**(Do we need temples?)**

**தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுதலாம். கட்டுரைகள் கலசத்தின் இரு பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.**

**பரிசு : தங்கப்பதக்கம்**

### பிரிவு 3
### ( 21 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

சமயமும் சமய குரவரும்

இருபத்தோராம் நூற்றாண்டில் சைவம்

கோயில் வழிபாடு

நமது மதம் இக்காலத்துக்கு ஏற்ப மாறியிருக்கிறதா?

மதம் மனிதனுக்கு அபின் என்ற கூற்றை ஆராய்க.

**தமிழில் மட்டும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகள் கலசத்தின் நான்கு பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல்வேண்டும்.**

**பரிசுகள்: £100, £70, £30**

## கட்டுரைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி

## 25 - 10- 1998

# பிற மதங்கள்

**-கண்ணதாசன்-**

இந்துமதம் பிறமதங்களை வெறுப்பதில்லை. சொல்லப்போனால் எல்லா மதங்களையும் தன்னோடு சமமாகவே கருதுகின்றது.

மதத்துவேஷம், எந்தக் காலத்திலும், இந்துக்களால் ஆரம்பிக்கப்பட்டதில்லை.

அதன் பரந்த கரங்கள், அத்தனை மதங்களையும் அணைத்துக்கொண்டே வளர்ந்திருக்கின்றன.

ஓர் ஏரியின் நீரைப்போல பரம்பொருளையும், அதில் இறங்குகினற பல படித்துறைகளைப்போல் எல்லா மதங்களையும் பரமஹம்சர் காணுகின்றார்.

அன்பின்மூலம் அன்பு வளர்வதைப்போல வெறுப்பின் மூலம் வளர்வதில்லை என்கிறது இந்து மதம்.

வெறுப்பு ஒரு குறுகிய கூட்டுக்குள் சதிராடுகின்றது. அன்போ, வானையும் கடலையும்போல அறிவை விரியச் செய்கிறது.

நிலத்தைப் பங்கு போட்டுக் கொள்வதுபோல் வானத்தைப் பங்குபோட முடிவதில்லை.!

நிலம் என்பது மதம்! வானம் எனடபது பரம் பொருள் என்கிறார் பரமஹம்சர்.

வீட்டின் உச்சி முகட்டுக்குப் போக ஏணி, மூங்கில்படி, கயிறு-இவற்றில் ஏதேனும் ஒன்றன் உதவியைக் கொண்டு ஏறலாம். அது போலப் பரம்பொருளை அடைவதற்கு வேறு வேறு மார்க்கங்கள் உண்டு. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட மார்க்கங்களின் ஒன்றைத்தான் காட்டுகிறது.

மின்சார விளக்கின் ஒளி மங்கலாகவோ பிரகாசமாகவோ வெவ்வேறு விதமாகத் தோன்றுமாயினும் மின்சாரம் ஒரே இடத்திலிருந்துதான் வருகிறது.

அதுபோலவே வெவ்வேறு காலத்தில் தேசந்தோறும் தோன்றிய மதபோதகர்கள் அனைவரும், சர்வ சக்தியுள்ள ஒரேயொரு மூலப் பொருளிடமிருந்து இடைவிடாது பெருகிக் கொண்டிருக்கும் ஒளியை வெளியிடும் தீப ஸ்தம்பம் போன்றவர்களே ,என்கிறார் பரமஹம்ஸர்.

எல்லாமதங்களாலும் போற்றப்படும் இறைவன் ஒருவனாகவே இருந்தால் ஏன் அவனைப் பல மதங்களும் பல மாதிரி வர்ணிக்கின்றன?

இங்கு பரமஹம்சரின் பதில்:

நீ வீட்டு எஜமானன். உன் மனைவிக்குக் கணவன். மகனுக்குத் தந்தை. வேலைக்காரனுக்கு முதலாளி. ஆனாலும் நீ ஒருவன்தான்.

அவரவரும் உன்னிடம் கொண்ட உறவு முறையை வைத்து என்னைப் பார்ப்பதுபோல், பல மதத்தவரும் ஆண்டவனைப் பல விதத்தில் பார்க்கிறார்கள்.

ராமகிருஷ்ணரின் இந்த வாக்கு இந்துவின் விரிந்த ஞானத்துக்கு எடுத்துக்காட்டு.

இந்து மதத்திற்கு எதிராகப் பல கட்டங்களில் தோன்றிய நாத்திக வாதம் தானாகவே மடிந்து போனதற்குக் காரணம் இதுதான்.



## வாசகர் கவனத்திற்கு...

அன்பு மிக்க வாசகர்களே! கலசத்தின் 25 ஆவது மணி அதிக பக்கங்களுடன் வெளிவரவுள்ளது. இம் மலரை நீங்கள் காலாகாலம் பேணிவைக்கக்கூடிய பெட்டகமாக அமைக்க திடசங்கற்பம் கொண்டுள்ளோம். ஆதலால் இம் மலருக்கான ஆக்கங்களை சிரமம்பாராது அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம். அத்தோடு உங்கள் நண்பர்களை இதன் சந்தாதாரர்களாக்கி நீங்களும் எம்மோடிணைந்து சமயப்பணியாற்ற முன்வாருங்கள் என்று அன்போடு அழைக்கின்றோம்

-ஆசிரியர்-

# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

**TO COLOMBO AND OTHER WORLDWIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR AIRLANKA**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

# GLEN CARRIERS LIMITED

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME**
**ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

**Tel: 0181 740 8379/ 0181 749 0595**

**Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G**

**BONDED WAREHOUSE**

**LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576**

# SATHY ESTATES LTD
# SATHY PROPERTY SERVICES

# Residential Lettings

## LANDLORDS & TENANTS WELCOME

LANDLORDS

**YOUR RENT IS GUARANTEED * QUARTERLY RENT PAYABLE IN ADVANCE**

TENANTS

**ACCOMMODATION ARRANGED TO SUIT YOUR COMFORTS**

AREAS

**LONDON BOROUGHS OF BRENT * HARROW * EALING * BARNET**

**SATHY PROPERTY SERVICES LTD**
29 Wembley Hill Road, Wembley, HA9 8AS
**Tel: 0181 902 2221**
**Fax: 0181 903 8560**

**SATHY ESTATES LTD**
177 HIGH ROAD, WILLESDON NW10 2SD
**Tel: 0181 830 2585**
**Fax: 0181 830 3100**

*P.S.Ragu*

# STAT MUSIC

**WHOLE SALE AND RETAIL**

*** Tamil Hindi * Malayalam* * Audio, CD's, Video CD, Video ***
**Magazine Distributors ***

## தரமான ஒலி ஒளிகள்!!!







**FOREVER AND EVER GOOD QUALITY**

திரை, இசை நட்சத்திரங்களின் புதிய-பழைய திரைப்படப் பிரதிகளையும், சீ.டி, சீ.டி வீடியோ, ஓடியோக்களையும், வார மாத தமிழ், ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.



**209, High Street North, East Ham, London, E6 1GH.**
**Tel: 0181 - 5522727 /Fax: 0181 - 692 7759**

**247, High Street North, Manor Park, London, E12 6SJ.**
**Tel: 0181 - 472 6084**

**Open 7 Days A Week 11.00AM - 11.00PM**

நியாய விலைக்கு இலண்டனில் ஒரே தங்கமாளிகை

# Raju Pattni & Son

தமிழர்கள் விரும்பிச் செல்லும் ஒரே தங்க மாளிகை

**We specialise in 22CT. Gold & Diamond Jewellery**
**Tax Free For Overseas Visitors**



தமிழ் மக்களின் நம்பிக்கையும் நன்மதிப்பும் பெற்ற, நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.

அழகான வண்ண வண்ண உத்தரவாதம் உள்ள 22 கரட் தங்கத்திலான தாலிக்கொடிகள், நெக்கிலஸ்கள், மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணங்களில் அமைந்த அட்டியல் வகைகள், பதக்கம் சங்கிலிகள், அழகான டிசைன்களில் கண்களைப் பறிக்கும் தங்க வளையல்கள், சங்கிலிகள் இவை மாத்திரமா? பென்ரன்கள், தோடுகள், இரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள் மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரேயொரு நகை மாளிகை.

# ராஜு பட்னி அன் சன்

**58 - 60 Ealing Road, Wembley, Middx HA0 4TQ**
**Tel: 0181 903 6677, 0181 902 0577, Fax: 0181 903 4887**

பொன்னுருக்குவதற்கு ஏற்ற வசதிகளுமுண்டு.

£2000 க்கு மேல் நகை வாங்கும் உங்களுக்கு £100 நன்கொடைச் சீட்டை இலவசமாக வழங்கக் காத்திருக்கின்றார்கள் ராஜுபட்னி அன் சன் நகை மாளிகையினர்

இன்றே குடும்பத்துடன் விஜயம் செய்யுங்கள்.



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14. 01. 98 அன்று வெளியிடப்பட்டது.